வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. மனிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER நியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 29.08.2024 வியாழக்கிழமை இதழ் : 242 பக்கங்கள் : 12

### தேர்தல் அறிக்கையில் சமஷ்டியை குறிப்பிட்டால்

# தேர்தல் பகிஷ்கரிப்பை பரிசீலிப்பதற்கு தயார்!

## சஜித்துக்கு த. தே. ம. முன்னணி கடிதம்!

யாழ்ப்பாணம், ஒக. 29

ஒற்றையாட்சி முறையை ஒழித்து சமஷ்டி அரசியல் யாப்பை ஏற்படுத்துவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தனது தேர்தல் அறிக்கையில் வெளியிட்டால் ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிப்பது என்ற எமது நிலைப்பாட்டை பரிசீலனை செய்ய முடியும் - இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சஜித் பிரேமதாஸவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவைக் கோரி சஜித் பிரேமதாஸ கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். இந்தக் கடிதத்துக்கு அனுப்பியுள்ள பதில் கடிதத்திலேயே முன்னணி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில், "வேட்பாளரான நீங்கள் 11



உலகப்புகழ் பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற கைலாய வாகனத் திருவிழாவில்... (படம் ஐ. சிவசாந்தன்)

## தேர்தல் விதி மீறலில் மருத்துவமனை

கொழும்பு, ஒக. 29

கொழும்பு சிறீ ஜெயவர்த்தனபுர மருத்துவமனை நிர்வாகம் தேர்தல் விதிமுறைகளை மீறி காலி மாவட்டத்தில் 150 புதிய ஊழியர்களை இணைத்துக் கொண்டுள்ளது என்று அகில இலங்கை சுகாதார சேவை சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

100 சுகாதார உதவியாளர்கள், 50 முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் 11

## போலி கருத்துக்கணிப்பு

கொழும்பு, ஒக. 29

போலி கருத்துக் கணிப்புகள் குறித்து வாக்காளர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய வேண்டுகோள் விடுத்துள்ளார்.

போலியான கருத்துக் கணிப்புகளுக்கும் உண்மையான கருத்துக்கணிப்புகளுக்கும் இடையிலான வித்தியாசத்தை அடையாளம் காண்பது கடினமானது. இதன் காரணமாக வாக்காளர்கள் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் 11

## பொது வேட்பாளரை நான் ஆதரிக்கிறேன்

### த. வி. கூட்டணி தலைவர்

மட்டக்களப்பு, ஒக. 29

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் போட்டியிடுவதை நான் முழுமையாக ஆதரிக்கிறேன் என்று தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் அருண்மொழிவர்மன் (அருண்) தம்பிமுத்து தெரிவித்துள்ளார்.

எமது சகோதர ஊடகமான டான் தமிழ் ஒளி தொலைக்காட்சியின் "நெற்றிக்கண்" நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு 11

## ஐ. நா. மனித உரிமை விடயங்களை தேர்தல் பரபரப்பில் மறந்துவிடாதீர்

### தமிழ் தேசிய கட்சிகளுக்கு ரெலோ அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஒக. 29

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் பரபரப்புகளில் தமிழ் மக்களின் பிரதான விடயமான ஐ. நா. அமர்வுகளைப் புறந்தள்ளி விட வேண்டாம் என்று தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 57ஆவது அமர்வு நடைபெற இருக்கும் இவ்வேளையில் ஐ. நா. மனித உரிமைகள் அறிக்கை மனித உரிமைகள் பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எமது தரப்பில் மனித உரிமைகள் 11

## பொது வேட்பாளருக்கே வாக்களிக்க வேண்டும்!

### யாழ். வணிகர் கழகம்

யாழ்ப்பாணம், ஒக. 29

தமிழர்களின் ஒற்றுமை, சுயாட்சி, மற்றும் சுயநிர்ணய கோரிக்கையை நிலைநிறுத்தி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ் பொதுவேட்பாளரான பா. அரியநேத்திரனை ஆதரித்து எமது வரலாற்றுக் கடமையை நிறைவேற்றி உலகமெல்லாம் ஒலிக்க சங்கு சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் வணிகர் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் 11



## தமிழ் பொது வேட்பாளருக்கு திருமலையில் பணிமனை!

திருகோணமலை, ஒக. 29

தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரனுக்கான திருகோணமலை மாவட்ட பணிமனை நேற்று புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

14 பேர் கொண்ட, தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பின் உறுப்பினர்களில் ஒருவரான அரசியல் ஆய்வாளர் யதீந்திரா, இலங்கை தமிழ் அரசு கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் விவசாய அமைச்சருமான சி. தண்டாயுதபாணி, தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை 11

## தமிழ் அரசின் பரிதாப நிலைக்கு கட்சியிலுள்ள ஒருவரே காரணம்

### விக்னேஸ்வரன் எம். பி. சாடல்

- பா. பிரசன்னா -

யாழ்ப்பாணம், ஒக. 29

தமிழ் அரசுக் கட்சியின் இன்றைய பரிதாப நிலைமைக்கு அந்தக் கட்சியிலுள்ள ஒருவர் மட்டுமே காரணம் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன்.

யாழ்ப்பாணத்தில் அவர் நேற்று செய்தியாளர் சந் திப்பை நடத்தினார். இதில் பங்கேற்ற செய்தியாளர் ஒரு வர், தமிழ் அரசுக் கட்சியிலிருந்து 11

## ரெலோ ஒருபோதும் ரணிலை ஆதரிக்காது!

### செல்வம் அடைக்கலநாதன்

வவுனியா, ஒக. 29

தமிழீழ விடுதலை இயக்கம் ஒருபோதும் ரணிலை ஆதரிக்காது. நாம் மூவர் ஜனாதிபதியை சந்தித்தோம் என்று எம்மீது சேறு பூச முனைகிறார்கள் என்று செல்வம் அடைக்கலநாதன் எம். பி. தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஜே. வி. பியினர் தமிழர்களின் 11



## தமிழ் அரசு எம்.பிகள் பணம் பெற்றனரென விஷம பிரசாரம்!

### சுமந்திரன் எம். பி. சாடல்

யாழ்ப்பாணம், ஒக. 29

இலங்கை தமிழ் அரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நிதி அபிவிருத்திக்கானது. இந்தப் பணம் நேரடியாக எம்.பிக்களுக்கு வழங்கப்படாது. இதை வைத்து விஷமப் பிரசாரம் மேற்கொள்ளப்படுகின்றது என்று பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார். 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் பெருந்திருவிழாவின் 20ஆம் திருவிழாவான நேற்று பட்டித் திருவிழாவும் தொடர்ந்து சந்தான கோபாலர் வீதியுலாவும் நடைபெற்றவேளை....! (படங்கள் ஐ. சிவசாந்தன்)

# நல்லூர் பெருந்திருவிழாவில் இன்று!

யாழ்ப்பாணம், ஒக. 29

நல்லூர் பெருந்திருவிழா நாட்களில் சிறீலசிறீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5.30 மணி வரை கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்று வருகின்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இன்று வியாழக்கிழமை மல்லாகம் கந்தையா சபேஷன் குழுவினரின் பஜனை நடைபெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (ஐ)

• • •

யாழ்ப்பாணம், ஒக. 29

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சிறப்பு நிகழ்வுகளை ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடத்தப்படும் இந்த நிகழ்வில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் சிறீலசிறீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர் தொண்டு நாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க நிகழ்வு ஆரம்பமாகும்.

மானிப்பாய் மருதடி விநாயகர் தேவஸ்தான பிரதம குரு சிவசிறீ நாகேந்திர சிவாகரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜாபிரதம அதிதியாகவும் ஊர்காவற்றுறை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி துஷானி வசந்த கோகுலன் கௌரவ அதிதியாகவும் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் பே. தனபாலசிங்கம் சிறப்பு அதிதியாகவும் பங்கேற்பர்.

இதில், பருத்தியடைப்பு கதிரேசன் அறநெறி பாடசாலை, தம்பாட்டி முத்துமாரி அம்மன் அறநெறி பாடசாலை, புளியங்கூடல் தங்கம்மா மடாலய அறநெறி பாடசாலை, நாரந்தனை தான்தோன்றி மனோன்மணி அறநெறி பாடசாலை, கணபதீஸ்வரன் சிவன் அறநெறி பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். விசேட நிகழ்வாக திருமதி கவிதா வாமதேவ சர்மாவின் மாணவர்கள் வழங்கும் 'விரலிசை கானங்கள்', ஊர்காவற்றுறை நர்த்தனாலய மாணவர்கள் வழங்கும் நடன நிகழ்வு என்பன நடைபெறவுள்ளன என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அநிருத்தனன் தெரிவித்துள்ளார். (ஐ)

# காப்பாற்றப்பட்ட மீனவர்கள் இந்திய துணை தூதரகத்திடம்!

யாழ்ப்பாணம், ஒக. 29

கச்சதீவுக்கு அண்மையில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானபோது காப்பாற்றப்பட்ட இரண்டு இந்திய மீனவர்களும் நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் ஒரு படகில் 4 இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது, படகு கடலில் மூழ்கியது. ரோந்து சென்ற படையினர் இரு மீனவர்களை காப்பாற்றினர். இருவர் காணாமல் போயினர்.

இந்தநிலையில், காப்பாற்றப்பட்டவர்கள் குமுதினி படகு மூலமாக குறிகாட்டுவானுக்கு அழைத்து வரப்பட்டு யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்கள் இருவரையும் இன்று வியாழக்கிழமை பலாலி விமான நிலையமூடாக இந்தியாவுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இந்திய துணைத் தூதரகம் தெரிவித்தது. (ஐ)

# புலோலி விபத்தில் காயமடைந்தவர் பலி!

வடமராட்சி, ஒக. 29

புலோலி விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

வடமராட்சி புலோலியை சேர்ந்த 39 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த 21ஆம் திகதி புலோலியில் சைக்கிளில் சென்றவரை வான் மோதியது. இதில், படுகாயமடைந்தவர் பருத்தித்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

பின்னர், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் அவர் உயிரிழந்தார். (ஐ-2)

# இணுவிலில் அஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக. 29

அமரர் மருத்துவர் கந்தையா பாலசுப்பிரமணியத்தின் அஞ்சலி நிகழ்வு இன்று வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு இணுவில் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் வ. மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பேராசிரியர் க. தேவராசா, பேராசிரியர் க. சிறிகணேசன், ந. தவசோதிநாதன், தி. சந்திரஹாசன், தவில் மேதை கே. ஆர். புண்ணியமூர்த்தி, இ. பாலச்சந்திரன், திருமதி கி. கமலராணி ஆகியோர் அஞ்சலி உரைகளை நிகழ்த்தவுள்ளனர். (ஐ)

# ரெலோ தலைவர் சபாரத்தினத்தின் 72ஆவது ஜனன தினத்தில் அஞ்சலி!

வவுனியா, ஒக. 29

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) நிறுவுநர் தலைவர் சிறீ சபாரத்தினத்தின் 72ஆவது பிறந்த தினமான நேற்று புதன்கிழமை வவுனியா மணிக்கூட்டு கோபுரம் அருகேயுள்ள அவரின் சிலை அருகே அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.



இதன்போது, அவரின் சிலைக்கு மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் ரெலோ தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

தமிழீழ விடுதலை போராட்டத்தின் ஆரம்பகட்டப் போராளிகளில் ஒருவரான சிறீ சபாரத்தினம் 1952 ஒகஸ்ட் 28ஆம் திகதி யாழ்ப்பாணம் - கல்வியங்காட்டில் பிறந்தவர். தமிழீழ விடுதலை இயக்கத்தை (ரெலோ) நிறுவியவர் இவரே. விடுதலைப் போராட்டத்தில் ஏற்பட்ட சகோதர மோதலால் 1986 மே 6ஆம் திகதி இவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யுக்தியவில் 663 பேர் கைது

கொழும்பு, ஒக. 29

நாடளாவிய ரீதியில் நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையில் போதைப்பொருள் குற்றம் தொடர்பில் 663 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 649 ஆண்களும் 14 பெண்களும் அடங்குவர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களில் 17 பேர் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 139 கிராம் 05 மில்லி கிராம் ஹெரோயின், 568 கிராம் 535 மில்லி கிராம் ஐஸ் , 8 ஆயிரத்து 472 கஞ்சா செடிகள், 11 ஆயிரத்து 615 கிராம் 42 மில்லி கிராம் கஞ்சா மற்றும் 282 போதை மாத்திரைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (ஐ)

# 650 கைபேசிகளுடன் ஒருவர் கைதானார்!

சிலாபம், ஒக. 29

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 650 கைபேசிகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் - கற்பிட்டி பகுதியில் கெப் ரக வாகனத்தை கடற்படையும் பொலிஸாரும் சோதித்தபோதே சந்தேகநபர் கைபேசிகளுடன் கைது செய்யப்பட்டார்.

இந்த கைபேசிகள் இந்தியாவிலிருந்து கடல்மார்க்கமாக அனுமதிப்பத்திரமின்றி கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

கைதானவர் அநுராதபுரத்தை சேர்ந்த 52 வயதான நபராவர். அவரிடம் மேலதிக விசாரணைகளை நுரைச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஜெருசலேமில் தூதரகமா? மறுக்கிறார் ஜனாதிபதி!

கொழும்பு, ஒக. 29

இலங்கை அரசாங்கம், ஜெருசலேமில் புதிய தூதரக பணிமனை ஒன்றை திறந்திருப்பதாக பரவும் தகவல் உண்மைக்கு புறம்பானது என்று அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையினரை சந்தித்து கலந்துரையாடிய போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, இஸ்ரேலில் பணியாற்றும் இலங்கையருக்கு சேவை வழங்குவதற்காக 2000 ஆம் ஆண்டு முதல் தூதரக சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையினரை சந்தித்து கலந்துரையாடியபோது ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
29.08.2024 வியாழக்கிழமை
குரோதி வருடம், ஆவணி 13

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# விருப்பு வாக்கு ஏற்புடையதா?

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் எவ்வாறு அமையும் என்பதை எவராலும் கணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. இந்த நிலையில் விருப்பு வாக்குகள் தொடர்பிலும் உரையாடல்கள் ஆங்காங்கே தலைநீட்டுகின்றன. தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட்டிருக்கும் பின்புலத்தில் தமிழ் மக்கள் மத்தியில் விருப்பு வாக்குகள் தொடர்பிலும் சிலர் பேச முற்படுகின்றனரெனத் தெரிகின்றது. ஒரு வேளை தென்னிலங்கை வேட்பாளர்கள் அவ்வாறு பேசினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. தமிழ் மக்கள் விருப்பு வாக்குகளை வழங்க முடியுமா? தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்துவிட்டு பிறிதொரு தென்னிலங்கை வாக்காளர் ஒருவருக்கு விருப்பு வாக்களிக்க முடியுமா?

தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது ஒரு கொள்கை நிலைப்பாடு. கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் சிந்திக்கும்போது இவ்வாறானதொரு நிலைப்பாட்டை நோக்கி செல்வதைத் தவிர, தமிழ் மக்களுக்கு முன்னால் வேறு எந்தவொரு தெரிவும் இல்லை. இவ்வாறானதொரு பின்னணியில்தான் ஒரு வரலாற்று முடிவாக தமிழ்ப் பொது வேட்பாளர் களமிறக்கப்பட்டிருக்கின்றார். ஆனால், இதனைத் திசைதிருப்பும் நோக்கில் விருப்பு வாக்குகள் தொடர்பிலும் பேச்சுகள் அடிபடுகின்றன.

தென்பகுதியில் கடும் போட்டிநிலை காணப்படுவதால்தான் இம்முறை விருப்பு வாக்குகள் தொடர்பிலான கவனம் ஏற்பட்டிருக்கின்றது. தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்களில் எவருமே ஐம்பது வீதத்துக்கு மேலான வாக்குகளைப் பெற முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. எண்ணிக்கையில் சிறுபான்மை மக்களின் ஆதரவைப் பெரும்பான்மையாகப் பெறுபவர்கள் மட்டுமே ஜனாதிபதியாக வரக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இந்த நிலையில்தான் விருப்பு வாக்குகளுக்கான தூண்டில்களையும் சிலர் தயார் செய்கின்றனர் எனத் தெரிகின்றது.

விருப்பு வாக்கு ஏன் ஏற்புடையது அல்ல. ஏனெனில், கொள்கை நிலைப்பாடு ஒன்றுக்கு விருப்பு வாக்கு இருக்க முடியாது. ஒரு கொள்கை நிலைப்பாட்டுக்காக தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்துவிட்டு எவ்வாறு அந்தக் கொள்கை நிலைப்பாட்டை எதிர்ப்பவர்களுக்கு வாக்களிக்க முடியும்? ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்தவரையில் சிங்கள மக்கள் விருப்பு வாக்குகளை வழங்க மாட்டார்கள். ஏனெனில், அநுரவுக்கு வாக்களிப்பவர்களால் ரணிலுக்கு விருப்பு வாக்குகளை அளிக்க முடியாது. இந்த நிலையில் எண்ணிக்கையில் சிறுபான்மையான மக்கள் மட்டுமே விருப்பு வாக்குகளை வழங்கும் சந்தர்ப்பம் காணப்படுகின்றது. ஆனால், ஈழத் தமிழினம் அதனை செய்ய முடியாது. ஏனெனில், அது அரசியல்ரீதியிலும் தர்க்கரீதியிலும் தவறானது.

எனவே, தமிழ் மக்களை விருப்பு வாக்குகளின் அடிப்படையில் குழப்பும் சக்திகள் தொடர்பில் கவனமாக இருக்க வேண்டும். தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாட்டின் நியாயத்தை சீர்க்குலைக்கும் நோக்கம் கொண்டவர்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்ளக்கூடும். அதேவேளை, தமிழ்த் தேசிய அரசியல் புத்தெழுச்சி பெறுவதை ஏற்க முடியாதவர்களும் இவ்வாறான குழப்பங்களை மேற்கொள்ளக்கூடும்.

தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிக்கும் நியாயத்துக்கு முன்னால் விருப்பு வாக்குகள் என்று ஒன்றில்லை - அவ்வாறிருப்பதாக எண்ணுவது தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுக்கு மாறானது.

## நல்லூரான் திருவடி - 21

# வீண்விரயத்தை தவிர்த்தால் பொருளாதாரம் வளரும்!

- தமிழுவேள்

ஒரு தீக்குச்சியால் ஆச்சிரமத்தின் உட்புற தியான அறை விளக்கையும், வெளி அறை விளக்கையும் ஏற்றுமாறு யோகர் சுவாமி என்னிடம் அவரைக் காணப்போனபோது கூறினார். அப்போது மாலை வேளையாகியிருந்தது.

அவரின் தியான அறையில் பல தீப்பெட்டிகள் இருந்தன. ஆனால், சுவாமி ஏன் ஒரு தீ குச்சியால் தமது அறைகளின் விளக்குகளை ஏற்றுமாறு கூறினார் என்று நினைத்தவாறே, அவர் கூறிய இரு விளக்கு களையும் ஏற்றினேன். அச்சமயம், "பொருளா தாரம் என்று பலர் திட்டமிடுகின்றனர். ஆனால், பொருளாதா ரத்தின் அடிப்படைத் தன்மையே எதனையும் வீண் விரயம் செய்யாது, சிக்கனமாக இருப்பதே யாகும். விரயத்தைத் தவிர்த்தால் பொருளா தாரம் வளரும்", என்று யோகர் என்னிடம் கூறினார்.



அன்று முதல் எப் பொருளையும் வீண் விரயம் செய்யாது நடந்துகொண்டேன். விளக்கு ஏற்றும்போது கிழக்கு அல்லது வடக்கு நோக்கி நின்றே ஏற்றவேண்டுமென்று நினைத்தேன். அவ்வாறு நான் எண்ணியபோது, கடவுள் எல்லாத் திசைகளிலும் இருக்கின்றார். ஆதலால், விளக்குகள் ஏற்ற திசை பார்க்கவேண்டியதில்லை என்று சுவாமி கூறினார்.

வெளிநாடுகளிலிருந்து வரும் ஆன்மீகப் பெரியார்களைப்பற்றி யோகர் என்னோடு உரையாடுவார். வருபவர்களை சரிவர அறியாது எம்மவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். அறிஞர்கள், ஞானிகள் இங்கிருக்கின்றனர். பற்றற்ற ஒரு ஞானியாக யோகர் இருந்தாலும் தனது நாட்டின் ஆன்மீக நெறியாளர்கள் குறித்து யோகர் வைத்திருந்த உயர்வான சிந்தனையை அன்று நன்குணர்ந்தேன்.

ஆச்சிரமத்தில மாலை நேரத்தில் இருக்கக் கிடைத்தால் அவர் வளர்த்த பசு வருகின்றதா என்று பார்க்கச் சொல்வார். விலங்குகள்மீது மிகுந்த காருண்யம்மிக்கவராக யோகர் விளங்கினார். இந் நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் ஆன்மீக ஞானிகளைத்தேடி இந்தியாவுக்குப் பலர் செல்வது வழக்கமாகும். இந்தியாவிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பல அடியார்கள் இலங்கை வந்து, யாழ்ப்பாணத்தில் சுவாமிகளைத் தரிசனம்செய்து ஆசி பெற்றிருந்தனர். அத்துடன், மேற்குலகைச் சேர்ந்த பலர் சுவாமிகளின் சீடர்களாகியிருந்தனர். இன்றும் அவரை மனதில் நிறுத்தி வழிபட்டு வருகின்றனர்.

பகவான் இராமகிருஷ்ணரின் சனாதன தர்ம உபதேசங்களை மேற்குலகில் சுவாமி விவேகானந்தர் பரவச்செய்து, நிறுவனங்கள் பலவற்றையும் நிறுவுவதற்கு விவேகானந்தர் நல்ல வழிகாட்டியாக இருந்தார். இதேபோல, யோகர் சுவாமிகளின் உபதேசங்களையும் ஆன்மீக நிலைப்பாடுகளையும் உலகறிய வைப்பதில் அவரது மேற்குலக சீடர்கள் நன்றாகவே பணிபுரிந்து வருகின்றனர். இதன் மூலம் தனது பிறந்த நாட்டுக்கும் பெருமை சேர்த்துள்ளார் யோக சுவாமிகள்.


யோகர் வாழ்ந்த காலத்தில் இலங்கையில் இடர்கள் ஏற்பட்டபோது கந்தபுராணம், கந்தர் கலிவெண்பா போன்றவற்றைப் படிக்குமாறு தமது அடியார்களுக்கு யோகர் அறிவுரை கூறினார். சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்கள் அதிக பலன் தருகின்றன என்றும் திருமந்திரத்தைப்போல நல்ல சிந்தனைத் தெளிவை ஏற்படுத்துகின்றனவாக அமைந்துள்ளன. யோகரது அளவிடற்கரிய அருளாற்றலை உணர்த்தும் செய்திகள், நிகழ்வுகள் பல இருக்கின்றன. சுவாமிகளது அருளாற்றலை இன்றும் பலர் அனுபவிப்பவர்களாகவே இருக்கின்றனர்.

ஒவ்வோர் இல்லத்திலும் யோகரின் நூல்கள் இருக்கவேண்டும். அவர் அருளிய நற்சிந்தனைப் பாடல்களும் பாடப்படவேண்டும். அதனால் வாழ்க்கைப் பயணம் இடையூறுகள், தடங்கல்களைத் தாண்டி, சுமுகமாகப் பயணிக்கும். நமது தேசமும் உலகமும் மேம்பட்ட நிலையை அடைந்தவையாக இருக்கும்.

**தொகுப்பு : அனந்த பாலகிட்ணர்**

(நாளை தொடரும்)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ராசிபலன்

ஓகஸ்ட் - 29 புதன்கிழமை
குரோதி வருடம் - ஆவணி 13
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : ஏகாதசி

**மேடம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரம் செழிக்கும். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். தைரியம் கூடும் நாள்.

**இடபம்**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். வியாபாரத்தில் புதுதொடர்புகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திருப்பங்கள் நிறைந்த நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் சோர்வாக காணப்படுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**கடகம்**
கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிக்கப் பாருங்கள். மோதல்கள் வந்து நீங்கும். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் உள்ளவர்களிடம் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். உயர் அதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள்.

**கன்னி**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். புதுஇடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். சாதிக்கும் நாள்.

**துலாம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**விருச்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த ஒரு காரியத்தையும் போராடி முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். மறைமுக விமர்சனங்கள் வந்து போகும்.

**தனுசு**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் எல்லோரும் மதிப்பார்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர் எண்ணிக்கை அதிகரிக்கும். நன்மை கிட்டும் நாள்.

**மகரம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**கும்பம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும், உறவினர்களால் ஆதாயமும் உண்டு. உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**மீனம்**
கடந்த கால சுகமான அனுபவங்கள் எல்லாம் மனதில் நிழலாடும். நயமாகப் பேசுபவர்களை நம்ப வேண்டாம். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

# முருகன் மாநாட்டு தீர்மானம் குறித்து கூட்டணி தலைவர்களுக்கு விளக்கம்

## அமைச்சர் சேகர்பாபு தகவல்

சென்னை, ஓக. 29

முத்தமிழ் முருகன் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட சைவ சமயம் சார்ந்த தீர்மானம் குறித்து விமர்சித்த தி. மு. க. கூட்டணி கட்சித் தலைவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பி. கே. சேகர்பாபு தெரிவித்தார்.

சென்னை புரசைவாக்கம் கங்காதேசுவரர் கோவிலில் நடைபெற்று வரும் புனரமைப்பு பணிகளை அமைச்சர் ஆய்வு செய்தார்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது, தி. மு. க. அரசு பொறுப்பேற்றதில் இருந்து 1,983 கோவில்களுக்கு குடமுழுக்கு நிறைவு பெற்றிருக்கிறது. தி. மு. க. ஆட்சி பொறுப்பேற்று 39 மாதங்களில் 2 ஆயிரம் குடமுழுக்கு நடத்துவது என்பது மிகப்பெரிய சாதனை.

பழனியில் நடைபெற்ற முத்தமிழ் முருகன் மாநாட்டை அரசியலுக்காக கையில் எடுத்ததாக ஒருசிலர் கூறி வருகின்றனர். ஆட்சி அமைந்ததில் இருந்து முருகன் கோவிலில் ஏராளமான திருப்பணிகளை மேற்கொண்டு வருகிறோம்.

மாநாட்டில் இயற்றப்பட்ட தீர்மானத்தின்படி இந்து சமய அறநிலையத் துறை நிர்வாகத்துக்கு உட்பட்ட பாடசாலைகள் மற்றும் கல்லூரிகளில்தான் சைவ சமயம் சார்ந்த வகுப்புகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும், போட்டிகளை நடத்தி பரிசுகள் வழங்கவுள்ளதாகவும் கூறியுள்ளோம்.

இதுகுறித்து விமர்சித்த மார்க்சிஸ்ட் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன், வி. சி. க. பொதுச்செயலாளர் துரை. ரவிக்குமார் எம்.பி. ஆகியோருக்கு உரிய விளக்கமளித்துள்ளோம்- என்றார். (எ)

# விஜய் கட்சி கொடியில் இருந்து யானையை அகற்ற வேண்டும்

## பகுஜன் சமாஜ் கட்சி போர்க்கொடி



சென்னை, ஓக. 29

நடிகர் விஜய் தனது கட்சியின் கொடியில் இடம்பெற்றுள்ள யானை சின்னத்தை அகற்ற வேண்டும் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரியிடம் பகுஜன் சமாஜ் கட்சி முறையிட்டுள்ளது.

தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் கொடி அண்மையில் வெளியிடப்பட்டது. இந்த நிலையில், தங்கள் கட்சியின் சின்னமான யானையை விஜய் பயன்படுத்தியதற்கு, பகுஜன் சமாஜ் கட்சியினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

நடிகர் விஜய் அறிமுகம் செய்த கொடியில், பகுஜன் சமாஜ் கட்சியின் தேசிய அங்கீகாரம் பெற்ற யானை சின்னத்தை பொறித்துள்ளார்.

ஓர் அரசியல் கட்சியின் பிரதான சின்னமாக உள்ள யானையை, மற்றொரு கட்சி எந்த வடிவிலும் பயன்படுத்தக் கூடாது. ஆனால், விஜய் உள்நோக்கத்துடன் பயன்படுத்தியுள்ளார். இதை நீக்கவில்லை என்றால் மிகப்பெரிய சட்டப் போராட்டத்தை பகுஜன் சமாஜ் கட்சி மேற்கொள்ளும் என்று அந்தக் கட்சியின் எச்சரித்துள்ளனர். (எ)

# அரசமைப்புச் சட்டத்தை இந்திரா காந்தி சிதைத்தது பற்றி அறிந்து கொள்ளுங்கள்

## இளைஞர்களிடம் அண்ணாமலை வலியுறுத்தல்

சென்னை, ஓக. 29

முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி ஆட்சிக் காலத்தில் இந்திய அரசமைப்புச் சட்டம் எந்தளவுக்கு சிதைக்கப்பட்டது என்பது பற்றி மக்கள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்று தமிழக மாநில பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

சட்டமேதை அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு பற்றிய தமிழ்ப் புத்தகம் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அண்ணாமலை,

இந்தப் புத்தகத்தை பொது மக்கள் குறிப்பாக இளைஞர்கள், மாணவர்கள் படிக்க வேண்டும். இந்திரா காந்தி ஆட்சிக் காலத்தில் இந்திய அரசமைப்புச் சட்டம் எந்த அளவுக்கு சிதைக்கப்பட்டது என்பது பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்.

நாம் அரசியல் வேற்றுமையை மறந்து நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் இந்திய அரசமைப்புச் சட்டத்தை பாதுகாக்க வேண்டும்- என்றார். (எ)

# தமிழகத்தில் கல்வியை குறிவைத்து அழிக்க நினைக்கிறது மத்திய அரசு

## சபாநாயகர் அப்பாவு குற்றச்சாட்டு

திருநெல்வேலி, ஓக. 29

மத்திய பா. ஜ. க. அரசு தமிழகத்தில் கல்வியை குறிவைத்து அழிக்க நினைக்கிறது என்று தமிழக சட்டப் பேரவை தலைவர் அப்பாவு குற்றஞ்சாட்டியுள்ளார்.

திருநெல்வேலி, பாளையங்கோட்டை சாராள் தக்கர் மேல்நிலை பாடசாலையின் 166ஆவது ஆண்டு விழாவில் பங்கேற்ற அவர் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு, 2022ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு கல்விக்காக தமிழகத்துக்கான நிதியை ஒதுக்கவில்லை. ஆனால், இந்தியாவில் கல்வியில் முதலிடம் வகிப்பது தமிழகம்தான். சிறந்த கல்வி தமிழகத்தில் உள் ளது. அதற்கு இடையூறு கொடுக்கும் விதமாக புதிய கல்வி கொள்கையை கொண்டு வந்துள்ளனர். அது சமூக நீதிக்கும். சமானிய மக்களுக்கும் விரோதமானது எனபதனால் நாங்கள் எதிர்க்கிறோம்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட களைநாசினிகள் ஆவரங்காலில் சிக்கின!

## விவசாயத் திணைக்களம் அதிரடி நடவடிக்கை



யாழ்ப்பாணம், ஒக. 29

**ஆவரங்கால் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் இருந்து சுமார் 40 இலட்ச ரூபாய் பெறுமதியான சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட களைநாசினிகள் மீட்கப்பட்டுள்ளன.**

யாழ்.மாவட்டத்தில் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட விவசாய இரசாயனம், களை நாசினிகள், பூச்சி நாசினிகளின் விற்பனை அதிகரித்துள்ள நிலையில், மாவட்டம் முழுவதும் விவசாய இராசாயன கட்டுப்பாட்டுப் பிரிவினர் அதிரடிச் சோதனை நடத்தி வருகின்றனர்.

இந்த சோதனை நடவடிக்கைகளின்போது ஆவரங்கால் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்று சோதனைக்குட்படுத்தப்பட்டு அங்கிருந்து சுமார் 4 மில்லியன் ரூபாய் பெறுமதியான சட்டவிரோத களை நாசினிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த வர்த்தக நிலையத்துக்கு சொந்தமான களஞ்சியசாலையிலும் பெருந்தொகையான கிருமி நாசினிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனை அடுத்து குறித்த வர்த்தக நிலைய உரிமையாளர் மீது விவசாயத் திணைக்களத்தினால் வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும் கிருமி நாசினிகளால் பொதுமக்களுக்கு மட்டுமல்லாமல் மண் வளமும் உடனடியாக பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

எனவே விவசாயிகள் இவ்வாறான சட்டவிரோத களை நாசினிகள் தொடர்பாக அவதானமாக இருக்கவேண்டும்.

அத்துடன் சட்டவிரோதமான களை நாசினி வியாபாரம் தொடர்பாக தகவல் அறிந்தால் விவசாய திணைக்களத்திற்கு தகவல் வழங்கவேண்டும் என மாவட்ட விவசாய திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அஞ்சனா ஸ்ரீரங்கன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

# வெப்பநிலையால் தோல் நோய்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் அதிகம்!

## வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஒக. 29

நாட்டில் தற்போது அதிகரித்து வரும் வெப்பநிலையால் தோல் நோய்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுவதாக வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவிக்கையில்-

நாடு முழுவதும் அதிகரித்து வரும் வெப்பநிலையினால் குழந்தைகளிடையே தோல் நோய் பிரச்சனைகள் மிகவும் பொதுவான ஒன்றாக உள்ளது.

அதிகரிக்கும் வெப்பநிலையினால் தோல் நோய்கள் ஏற்படுவதோடு, உடலில் நீர்ச்சத்து குறைபாடு அதிகரிக்கும் என்றும் அதிக சூரிய ஒளி படும் இடங்களில் இருப்பதை தவிர்ப்பதோடு, அதிகளவு தண்ணீர் பருகவேண்டும்.

மேலும், செயற்கையான குளிர் பானங்களை அருந்துவதை தவிர்த்து இயற்கையான தண்ணீர், எலுமிச்சை சாறு, இளநீர் போன்றவற்றை பருகவேண்டும்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஒரு நாளைக்கு இரண்டு முறை குளிப்பாட்டவேண்டும்- என்றார். (அ)


# இறப்பர் செய்கைக்காக உர மானியம் வழங்க விவசாய அமைச்சு தீர்மானம்!

கொழும்பு, ஒக. 29

இறப்பர் செய்கைக்காக 4,000 ரூபாவை உர மானியமாக வழங்க விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதன்படி இந்த வாரத்தில் இருந்தே உர மானியத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

பல வருடங்களாக இறப்பர் செய்கை நடவடிக்கைகளுக்கு உரம் இடப்படவில்லை என இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.



# ஐஸ் போதைப்பொருளுடன் ஆறு இளைஞர்கள் கைது!

முல்லைத்தீவு, ஒக. 29

உடையார்கட்டு குரவில் பகுதியில் ஐஸ் போதைப்பொருளை பயன்படுத்த தயாராக இருந்த இளைஞர்கள் 6 பேரை கைது செய்துள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன் தினம் மாலை இந்த கைது சம்பவம் இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உடையார்கட்டு குரவில் பகுதியிலுள்ள யாருமற்ற வீடொன்றில் சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் சார்ஜன்ட் குணவர்த்தனவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்ட புதுக்குடியிருப்பு பொலிஸ் குழுவினர் கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.

குறித்த இளைஞர்களிடமிருந்து 7 தொலைபேசிகளும், 17,000 ரூபா பணம் என்பவற்றுடன் 7 சிறு சிறு பொதிகளில் 90 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் உடையார்கட்டு குரவில் பகுதியை சேர்ந்த நால்வர், புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த இருவர் என 17, 18,18,21,23,24 வயதுடைய இளைஞர்கள் 6 பேரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர். (அ)

# கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும்போது நேரம் ஒதுக்கும் முறை இடைநிறுத்தம்!

கொழும்பு, ஒக. 29

கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும்போது முன்கூட்டி நேரம் ஒதுக்கும் முறைமை நேற்று முதல் இடைநிறுத்தப்படவுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

இதன்படி நேற்று முதல் வருகையின் வரிசைக்கு அமைய கடவுச்சீட்டுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என பொது பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.



அதேநேரம் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக பத்தரமுல்லையில் உள்ள குடிவரவு-குடியகல்வு திணைக்களத்துக்குச் சென்றுள்ள மக்கள் கடந்த சில நாட்களாக பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

உணவு, மலசலகூடம் உள்ளிட்ட வசதிகளின்றி நீண்ட நாட்களாக வரிசையில் காத்திருப்பதாக அங்கிருந்த மக்கள் தெரிவித்தனர்.

புதிய இலத்திரனியல் கடவுச்சீட்டை வழங்குவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக வெளிநாட்டு நிறுவனமொன்றிடமிருந்து விலை மனு பெறப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# செப்ரெம்பர் 2ஆம் திகதி விடுமுறை; சர்வதேச இந்து மத பீடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 29

நல்லூர் தீர்த்த தினமான செப்ரெம்பர் 2ஆம் திகதியன்று, விடுமுறை வழங்குமாறு சர்வதேச இந்து மத பீட செயலாளர் கலாநிதி சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.

மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் ஆகியோரிடமே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை நாட்டில் இலங்கை வாழ் மக்கள் மட்டுமல்ல, உலக வாழ் இந்துக்களும் நல்லூர் திருவிழாவில் கலந்து தங்களது பக்திபூர்வமான வேண்டுதலை செய்து வருகின்றார்கள்.

இந்நிலையில் 25 நாட்களாக விரதம் இருந்து நல்லூர் முருகனை வேண்டி நிற்கும் பக்தர்கள் செப்ரெம்பர் 2ஆம் திகதி தீர்த்த உற்சவத்துடன் தங்களது விரதத்தை பூர்த்தி செய்து கொள்வார்கள்.

இந்நிலையில் இந்த விரத பூர்த்தி தினமான தீர்த்த தினத்தை யாழ். மாவட்டத்தினருக்கு, பாடசாலை உட்பட அரச ஊழியர்களுக்கு குறிப்பாக இந்துக்களுக்கு விடுமுறை தினமாக அறிவிக்கவேண்டும் என்றே கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, இந்த கோரிக்கையின் பிரதிகள் வடக்கு மாகாண பிரதம செயலாளர் எல்.இளங்கோவன், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எம்.பற்றிக் டிறஞ்சன், யாழ். மாவட்ட செயலர் எம்.பிரதீபன் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நல்லூர் திருவிழா இலங்கை நாட்டின் ஒரு தேசிய திருவிழாவாகச் சகல இன மக்களாலும் பக்திபூர்வமாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

அந்த வகையில், இந்த தீர்த்த திருவிழா அன்று புண்ணிய விருதத்தைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக அத்தினத்தை விடுமுறை தினமாக அறிவித்தால் இந்து மக்கள் நன்றி உடையவர்களாக இருப்பார்கள் எனவும் குறித்த கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# உயிலங்குளம் வீதியில் விபத்தில் மூவர் காயம்

மன்னார், ஒக. 29

மன்னார் உயிலங்குளம் பகுதியில் நேற்று முன் தினம் மாலை பட்டா ரக வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் 03 பேர் படுகாயமடைந்த நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மன்னார்- மதவாச்சி பிரதான வீதி, உயிலங்குளம் பகுதியில் நேர் எதிரே வந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் பட்டா ரக வாகனம் மோதி விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிள் மற்றும் பட்டா வாகனத்தில் பயணித்த மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் முருங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மன்னார் பகுதியைச் சேர்ந்த இருவரும் மாந்தை மேற்கு பகுதியை சேர்ந்த ஒருவரும் காயமடைந்துள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை உயிலங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலியான வாக்குறுதிகளினால் மக்களுக்கு எதுவுமே கிடைக்காது!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 29

**தேர்தல் பிரகடனங்களின்போது போலியான வாக்குறுதிகளை வழங்குவதானால் மக்களுக்கு எந்த நிவாரணமும் கிடைக்கப் போவதில்லை எனவும் நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்தும் வேலைத்திட்டத்தினால் ஊடாகவே மக்களுக்கு நிவாரணம் வழங்க முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



கண்டி பூஜாபிடிய மாரது கொட மைதானத்தில் நடைபெற்ற "இயலும் சிறீ லங்கா" கூட்டணியின் பொதுக்கூட்டத்திலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் வங்குரோத்து அடைந்த நாட்டையே ஏற்றுக்கொண்டேன். அப்போது வரிசை யுகமும் உரத் தட்டுப்பாடும், அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடும் நிலவிய நாட்டையே காண முடிந்தது.

ஆனால் இன்று எந்த தட்டுப்பாடும் இன்றி வாழக்கூடிய சூழல் உருவாகியுள்ளது. இந்த மாற்றத்தின் அடுத்த கட்டத்தையே ஜனாதிபதி தேர்தல் தீர்மானிக்கப்போகிறது.

பொருளாதாரத்தைப் பலப்படுத்தியே வாழ்க்கை சுமையை குறைத்தோம். எரிவாயு, எரிபொருள் விலைகள் குறைந்துள்ளன.

இந்த நிலையை தொடர்ந்து பாதுகாப்பதா அல்லது கைவிடுவதா என்ற கேள்வியே இப்போது இருக்கிறது. சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து பயணிக்கவேண்டும்.

அவர்கள் அதற்கான வழிகாட்டல்களை வழங்குவர். மறுமுனையில் ஜே.வி.பி.யும் ஐக்கிய மக்கள் சக்தியும் சலுகைகளை வழங்குவதாக உறுதியளிக்கின்றன.

பொருட்களின் விலையைக் குறைக்கப் போதாகவும் கூறுகிறார்கள். சலுகை வழங்குவதாகச் சொல்லிக் கொண்டு நாட்டின் வருமானத்தை குறைக்க முடியாது.

ஏற்றுமதி பொருளாதாரத்தைப் பலப்படுத்துதல் உள்ளிட்ட ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்டத்தை கொள்கை பிரகடனத்தில் சொல்வேன்.

தொங்கு பாலத்தில் சென்ற பயணத்தை நிறைவு செய்வோம் என்று நாம் கூறும்போது, பாலத்தின் இரு பக்கங்களையும் வெட்டிவிடுவோம் என்று எதிர்க்கட்சியினர் கூறுகின்றனர்.

எனவே நாட்டை சுமூக நிலைக்கு கொண்டு வந்த குழுவுடன் பயணிப்பதா அல்லது சவால்களை ஏற்றுகொள்ளாமல் ஓடி ஒளிந்தவர்களுடன் பயணிப்பதா என்பதை நாட்டு மக்கள் தீர்மானிக்கவேண்டும்.

அதற்காகவே சிலிண்டரை சின்னமாக தெரிவு செய்தேன். சிலிண்டருக்கு வாக்களியுங்கள். இல்லாவிட்டால் சிலிண்டர் இருக்காது என்பதை நினைவில் கொள்ளுங்கள்-என்றார்.

(அ)

# ரணில் விடுத்துள்ள சவாலை அநுர, சஜித் ஏற்கவேண்டும்!

## வேலுகுமார் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஓக. 29

"சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள சவாலை ஏற்று விவாதம் நடத்துவதற்கு அநுரகுமார திஸாநாயக்க மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோர் முன்வர வேண்டும்." -என்று கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.



அத்துடன், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் 46 கோரிக்கைகள் அடங்கிய ஆவணம் வெத்து வேட்டு எனவும், அதனை சஜித் பிரேமதாச திருப்பிகூட பார்க்கவில்லை எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்கக்கூடிய ஒரே தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே இருக்கின்றார். அதனால்தான் சுயாதீனமாக வெளியேறி அவரை ஆதரிக்கும் முடிவை, நாடு மற்றும் நாட்டு மக்கள் நலன் கருதி எடுத்துள்ளேன்.

சர்வதேச நாணய நிதியம் வழங்கியுள்ள கடன் பொருளாதார மீட்சிக்கு பக்கபலமாக உள்ளது. ஆனால் சர்வதேச நாணய நிதியத்துடனான நிபந்தனைகள் மீள்பரிசீலனை செய்யப்படும் என எதிரணிகள் கூறுகின்றன. அவை எவ்வாறான நிபந்தனைகள் எனக் கூறமுடியுமா?இது தொடர்பில் எதிரணிகளிடம் தெளிவான பதில் இல்லை.

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டுள்ளது. இது நகைச்சுவைத்தனமான ஆவணமாகும். வற் வரியை நீக்கப்போகின்றார்களாம். சரி,வற் வரியை நீக்கினால் வருமான வழிமுறைகளை குறிப்பிட முடியுமா? எனவே, சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் ஜனாதிபதி விடுத்துள்ள சவாலை ஏற்று விவாதத்துக்கு வருமாறு சஜித், அநுர ஆகியோருக்கு அழைப்பு விடுக்கின்றேன்.

அதேபோல நாட்டை மீண்டும் வரிசை யுகத்தை நோக்கி தள்ள வேண்டாம் என இருவரிடமும் கோரிக்கை விடுக்கின்றேன்-என்றார்.

(அ)




# அரியநேத்திரனை ஆதரித்து வவுனியாவில் துண்டுபிரசுரம்!

வவுனியா, ஓக. 29

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள ப. அரியநேத்திரனை ஆதரித்து வவுனியா நகரில் நேற்று துண்டுப் பிரசுரம் விநியோகிக்கப்பட்டது.

தமிழ் தேசியப் பொதுக்கட்டமைப்பினரின் ஏற்பாட்டில் வவுனியா பழைய பஸ் நிலைய பகுதியில் குறித்த நிகழ்வு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# புலிகள் அமைப்பை அழித்ததால்தான் மகிந்தவை விட்டுச்செல்ல மனமில்லை

## பெரமுனவின் டீ.வீரசிங்க எம்.பி.

கொழும்பு, ஓக. 29

உலகிலேயே முப்படை பலத்தை கொண்டிருந்த புலிகள் அமைப்பை ஒழித்து, மக்கள் மத்தியில் இருந்த மரண பீதியை போக்கியதாலேயே மஹிந்த ராஜபக்ஷவை விட்டுச்செல்ல எனக்கு மனமில்லை - என்று பாராளுமன்ற உறுப்பினர் டீ. வீரசிங்க தெரிவித்தார்.

தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு-

ஜே.ஆர். ஜயவர்தனவால் போரை முடிக்க முடியாமல் போனது. ஆயுதம் வழங்கி போரை முடிக்கலாம் என நினைத்த ரணசிங்க பிரேமதாஸ, அதே ஆயுதத்தால் புலிகளால் கொல்லப்பட்டார். டி.பி. விஜயதுங்கவாலும் போரை முடிக்க முடியவில்லை. சந்திரிகா அம்மையாரும் கண்ணை இழந்தார்.

2005 இல் மகிந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போது தற்போது நாமலுக்கு நடந்ததுபோல கட்சி பிரமுகர்கள் கைவிட்டுச் சென்றனர். சுதந்திரக் கட்சி தலைமையகத்தை சந்திரிகா மூடினார். ஆனால் மக்கள் மகிந்தவை ஆதரித்தனர்.

புலிகள் அமைப்பு உலகில் பலம் பொருந்திய அமைப்பாக இருந்தது. தேச எல்லை இருந்தது. தரைப்படை, கடற்படை, விமானப்படை, பொலிஸ் என அத்தனை படைகளும் இருந்தன. நீதிமன்றம் வங்கிக் கட்டமைப்பும் இருந்தது.

இப்படிபட்ட அமைப்பை தோற்கடித்து, மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த மரணபீதியை போக்கி, புது வாழ்வு தந்தார். அதனால்தான் என்றும் அவர் பக்கம் நிற்கின்றேன். யார் போனாலும் நான் மஹிந்தவை விட்டு செல்ல தயாரில்லை.

பொலிஸ், காணி அதிகாரம் வழங்கப்படமாட்டா, ஒற்றையாட்சி பாதுகாக்கப்படும் என்ற உறுதிமொழியை நாமல் வழங்கியுள்ளார். வேறு வேட்பாளர்கள் இந்த உறுதிமொழியை வழங்கவில்லை-என்றார்.

(அ)

# சஜித் பிரேமதாஸ ஆட்சியில் பெண்களுக்கு விசேட திட்டம்

## கூறுகிறார் ஹிருணிகா

கொழும்பு, ஓக. 29

சஜித் பிரேமதாச ஜனாதிபதியானால் நாட்டின் பொருளாதாரத்தில் எழுச்சி ஏற்படும் என தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர, சஜித்தின் ஆட்சியில் பெண்களுக்கு என விசேட திட்டம் ஒன்றும் வகுக்கப்படும் என்று தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவை வெற்றிபெறச் செய்யும் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலில் புத்தளம் தொகுதியில் ஐக்கிய மக்கள் சக்தி நிச்சயமாக வெற்றி பெறும் என்பதில் சந்தேகமில்லை. என்றாலும், புத்தளத்தில் ஒரு இலட்சத்துக்கு மேல் வாக்குகளை எமது கட்சி பெற வேண்டும். புத்தளம் தான் முழு மாவட்டத்தையும் வெற்றி பெறச் செய்யும் தொகுதியாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதன்போது புத்தளம் மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி உட்பட உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் உறுப்பினர்கள், ஐக்கிய மக்கள் கட்சியின் பிரதேச அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள் என பெரும் எண்ணிக்கையிலானோர் கலந்துகொண்டனர். (அ)

# இனவாதம் என்பது நாட்டில் இருக்கும் மற்றுமோர் அரசியல் செயற்றிட்டமே!

கொழும்பு, ஓக. 29

இனவாதம் என்பது நாட்டிலுள்ள மற்றுமொரு அரசியல் செயற்றிட்டமே தவிர மக்களிடம் காணப்படும் விடயமல்ல எனத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

முஸ்லிம் இளைஞர்களுடன் கொழும்பில் இடம்பெற்ற சந்திப்பொன்றில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

இதுவரை காலமும் நாட்டில் ஒரு அரசாங்கம் உருவாகியிருக்கவில்லை எனவும் குடும்ப ஆட்சியொன்றே நாட்டில் இடம் பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய ஜனாதிபதி, ஐக்கிய தேசிய கட்சியில் உள்ள பலரை தமது ஆலோசகர்களாக வைத்துள்ளார் எனவும், அவர்களிடம் ஆலோசனை பெறும் நிலையில் நாட்டின் ஜனாதிபதி உள்ளாரா என்ற கேள்வி எழுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆலோசகர் என்பவர் ஏதாவது ஒரு விடயத்தில் அதிக திறனையும் அனுபவத்தையும் கொண்டவராக இருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமைவாதத்தை இன்னும் முன்வைக்கும் அனுர, சஜித்

## பிரசன்ன ரணதுங்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 29

**"உலகம் நவீனமயமடைந்துவிட்டது. அதற்கு ஏற்ப எமது பொருளாதார கொள்கைகள் நவீனமயப்பட வேண்டும். ஆனால், சஜித் பிரேமதாஸவும் அனுரகுமார திஸாநாயக்கவும் பழமைவாதத்தை முன்வைக்கின்றனர்."**

-இவ்வாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

உடுகம்பொல பிரதேசத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றிய அவர்,

நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு ஒளிமயமான ஒரு வாழ்க்கையை உருவாக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பயணிக்கும் இந்த கடினமான பொருளாதார பாதையில் இன்னும் சிறிது தூரத்திற்கு செல்ல வேண்டும்.

இந்தப் பொருளாதாரப் போக்கை மாற்றினால், கடந்த காலத்தை விட அதிகமான நெருக்கடிகளை நாம் சந்திக்க நேரிடும்.

எமது நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கடன் மறுசீரமைப்பு வேலைத் திட்டம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் பகிரங்க விவாதத்திற்கு வருமாறு சஜித் மற்றும் அனுரவுக்கு ஜனாதிபதி பகிரங்க அழைப்பு விடுத்தார். இருவருமே கதைப்பதில் வல்லவர்கள். இந்த சவாலை ஏற்றுக் கொள்வார்கள் என்று நாங்கள் நினைத்தோம்.

சஜித் மாத்திரம் மிகவும் யோசித்து அந்த சவாலை ஏற்றுக்கொண்டுள்ளார். ஆனால் அவர் ஜனாதிபதி வேட்பாளராக இந்த விவாதத்திற்கு வருவாரா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. அனுரவிடமிருந்து இன்னும் எந்த பதிலும் இல்லை.

நமக்குத் தெரிந்த பழைய ஜே.வி.பியினர் இப்படி இல்லை. ஒரு சவால் வரும்போது ஓடி வந்து அதை ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் இப்போதைய ஜே.வி.பியினர் துணிச்சலான முதுகெலும்பு உள்ளவர்கள் இல்லை. அவர்களால் தற்பெருமை காட்டத்தான் முடியும்.



சஜித், அனுர போன்றவர்களின் பொருளாதாரக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படும் போது சாமானிய மக்களுக்கு உணவு உண்ண முடியாத நிலையே ஏற்படும். அனுரவும் சஜித்தும் பழமைவாதத்தை பின்பற்றுபவர்கள்.

உலகம் இப்போது நவீனமயமாக மாறிவிட்டது. எனவே பழைய உலகத்திற்கு ஏற்றவாறு திட்டங்கள்ள உருவாக்குவது பயனற்றது. பொய் சொல்லி மக்களை ஏமாற்றலாம் என எதிர்க்கட்சிகள் நினைக்கின்றன. இம்முறை தேர்தல் முடிவுகள் அவர்கள் எவ்வளவு பின்தங்கியிருக்கிறார்கள் என்பதை காட்டும்-என்றார்.

(அ)

# அரசியல் மாற்றத்திற்காகவே ஜனாதிபதியுடன் இணைந்தேன்

## கூறுகின்றார் மகிந்தானந்த

கொழும்பு, ஓக. 29

அரசியல் களத்தில் இம்முறை மாறுபட்ட நிலைமை காணப்படுவதால் நாட்டு மக்களது நலன் கருதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவோடு இணைந்து பயணிப்பதற்குத் தயாராகவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அழுத்கமகே தெரிவித்தார்.

கண்டி பூஜாபிட்டிய மாரது கொட மைதானத்தில் நடைபெற்ற "இயலும் சிறீலங்கா" கூட்டணியின் பொதுக்கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் எனது அரசியல் வாழ்வில் ஒருபோதும் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்ததில்லை. கடந்த முறை எமது தாய் கட்சியான சுதந்திரக் கட்சியின் மேடையில் கூட ஏறவில்லை.

ஆனால் இம்முறை மாறுபட்ட நிலைமையே காணப்படுகிறது. பொதுஜன பெரமுனவின் 72 உறுப்பினர்கள் இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இருக்கின்றனர்.



எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் சஜித்தின் மேடையில் ஏறும் போதும், அவர்களின் கட்சி உறுப்பினர்கள் கூட்டாக வந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவோடு இணைந்து கொள்கிறார்கள்.

2022 ஆம் ஆண்டில் மக்கள் வாழ்க்கைச் சவால்களை எதிர்கொண்ட வேளையில் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சஜித்துக்கு அழைப்பு விடுத்தார். ஆனால் அவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

அனுரவும் சவாலை ஏற்கவில்லை. ரணிலுக்கு ஒரேயொரு அழைப்புதான் விடுக்கப்பட்டது. நாட்டை ஏற்று, நாட்டை மீட்டெடுத்துத் தந்தார்-என்றார்.

(அ)



# வவுனியாவில் தேசிய மக்கள் சக்தி தேர்தல் அலுவலகம் திறந்து வைப்பு

வவுனியா, ஓக. 29

தேசிய மக்கள் சக்தியின் வவுனியா மாவட்ட தேர்தல் அலுவலகம் நேற்று காலை கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் ரத்நாயக்கவினால் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட இணைப்பாளர் உப்பாலி சமரசிங்க தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கட்சியின் முக்கியஸ்தர்கள், கட்சி ஆதரவாளர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# திசைகாட்டி வெற்றி பெறுவதற்காக மக்களே அதிகம் பாடுபடுகின்றனர்!

## அநுரகுமார சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 29

மக்களின் நோக்கமும் ஆட்சியாளர்களின் நோக்கமும் ஒன்றாக உள்ள அரசாங்கம் அமைக்கப்படும் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

நாடு அனுரவிற்கு எனும் தொனிப்பொருளில் மாலம்பேயில் இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் பிரச்சாரக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் பெரும்பான்மையான மக்களின் விருப்பத்திற்கமைய அமைக்கப்படும் அரசாங்கம் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம்.

நாட்டு மக்கள் பல வருடங்களாக தேர்தலுக்காக காத்திருக்கின்றனர். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடாத்துவதாக கூறி ஒன்றரை வருடங்களாகின்றன.

ஆனாலும் நடத்தப்படவில்லை. ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமலிருக்க அரசாங்கம் இயன்றவரை முயற்சித்தது. ஆனாலும் முடியவில்லை.

முன்பு வாக்கெடுப்பு நடத்தும்போது ஆட்சியாளர் அதில் ஆர்வம் காட்டினார்கள், ஆனால் இன்று ஆட்சியாளர் வாக்குகளால் சலிப்படைந்துள்ளனர். நாட்டில் லட்சக்கணக்கான மக்களுக்கு வாக்களிக்கும் தேவையுள்ளது.

வாக்களிக்க இன்னும் குறுகிய காலமே உள்ளது. திசைகாட்டி வெற்றி பெற பாடுபடுவோம். நாம் திட்டமிட்டு



செய்த பணியை விட மக்கள் எம்மை வெற்றிப்பெறச் செய்வதற்கு அதிக வேலை செய்து கொண்டிருப்பதை காண முடிகிறது. இலங்கையில் முதன்முறையாக மக்கள் வாக்களிக்கும் பொறுப்பை ஏற்றுள்ளனர்.

எங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கை சிறிதும் வீணாகாது என்பதை உங்கள் அனைவருக்கும் உறுதியளிக்கிறோம். அந்த நம்பிக்கையும் அவ்வாறே பாதுகாக்கப்படும்-என்றார்.

(அ)

# சமூக வலைத்தளங்களில் போலியான பிரசாரங்கள்

## எஸ்.எம்.மரிக்கார் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 29

கருத்து கணிப்பு என்ற பெயரில் சமூக வலைத்தளங்களில் போலியான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுவதாக, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டு மக்களால் தாங்கிக் கொள்ள முடியாதளவிற்கு வரிகளை அதிகரித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மீண்டும் அதிகாரத்தைக் கையளிக்க முடியாது.

அவரது ஆட்சியில் பொருட்கள் சேவைகளின் விலைகள்



அதிகரித்தன. பணவீக்கம் உயர்வடைந்தது. இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

தனிப்பட்ட ரீதியில் சமூக வலைத்தளங்களில் போலியான கருத்துக் கணிப்புக்கள் வெளியிடப்படுகின்றன. அவை குறித்து மக்கள் தெளிவாக இருக்கின்றனர்-என்றார்.

(அ)

# ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் அலுவலகம் பரந்தனில்

கிளிநொச்சி, ஓக. 29

ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் அலுவலகம் பரந்தன் பகுதியில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.



கட்சியின் கிளிநொச்சி தொகுதி பிரதான அமைப்பாளர் ம.மரியசீலன் தலைமையில் நடை பெற்ற நிகழ்வில், ஐக்கிய மக்கள் சக்தியின் வடமாகாண பிரதான அமைப்பாளர் உமாச்சந்திரா பிரகாஸ் கலந்து கொண்டு கட்சி அலுவலகத்தை திறந்து வைத்தார்.

குறித்த நிகழ்வில் கட்சி ஆதரவாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

(அ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறையில் 5,55,432 பேர் தேர்தலில் வாக்களிக்க தகுதி

## அரச அதிபர் அபேவிக்கிரம தகவல்

கல்முனை, ஒக. 29

**செப். 21 இல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் 5 இலட்சத்து 55 ஆயிரத்து 432 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்று மாவட்ட தேர்தல் அதிகாரியும் மாவட்ட செயலாளருமான சிந்தக அபேவிக்கிரம தெரிவித்துள்ளார்.**



அம்பாறை மாவட்டத்தில் உள்ள தொகுதிகளின் எண்ணிக்கை (ஆசனங்கள்) 04 ஆகும். இதன்படி, தொகுதிகள் பின்வருமாறு. அம்பாறை 1, 88, 222 பேர், சம்மாந்துறை 99, 727 பேர், கல்முனை 82, 830 பேர், பொத்துவில் தொகுதியில் 1, 84, 653 பேர் ஆகும்.

தபால் மூல வாக்களிப்புக்காக பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 27, 645 ஆகும். ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 26, 778 எனவும் 867 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் அம்பாறை மாவட்ட தேர்தல் அதிகாரி தெரிவித்தார்.

42 மையங்களில் தபால் மூல வாக்களிப்பு நடைபெறும் என்றும், ஹார்டி உயர் தொழில்நுட்ப வளாகத்தில் வாக்கு எண்ணும் பணி நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

அம்பாறையில் 184 வாக்களிப்பு நிலையங்களும், சம்மாந்துறையில் 93 வாக்களிப்பு நிலையங்களும், கல்முனையில் 74 வாக்களிப்பு நிலையங்களும், பொத்துவிலில் 177 வாக்களிப்பு நிலையங்களும் உள்ளடங்கலாக அம்பாறை மாவட்டத்தில் 528 வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்படவுள்ளன.

தற்போது, சிரேஷ்ட வாக்களிப்பு நிலைய கட்டளைத் தளபதிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுக்கு தபால் மூல வாக்குகளை வழங்குவதற்கான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், எதிர்காலத்தில் சபை செயலாளர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு பயிற்சி வழங்க எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அரச அதிபர் தெரிவித்தார். (எ)

# அலுவலக திறப்பு விழா






கல்முனை, ஒக. 29

அம்பாறை, கல்முனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட நற்பிட்டிமுனை சமூக சேவைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றியத்தின் அலுவலகமானது நற்பிட்டிமுனை ஜும்ஆ பள்ளிவாசல் வீதியில் திறந்து வைக்கப்பட்டது. அத்துடன் நற்பிட்டிமுனை ஜனாஸா நலன்புரி அமைப்பின் நீண்ட கால தேவையாக காணப்பட்ட கதிரை பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் ஒர் இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 50 கதிரைகள் குறித்த நலன்புரி அமைப்பின் அங்கத்தவர்களிடம் கையளிக்கப்பட்டன.

(எ)

# ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு அலுவலர்களுக்கு பயிற்சித் திட்டம்





கல்முனை, ஒக. 29

ஜனாதிபதித் தேர்தல் 2024 தபால் மூல வாக்குச் சான்றிதழ் தொடர்பில் அலுவலர்களுக்கான பயிற்சித் திட்டம் அம்பாறை மாவட்ட தேர்தல் அதிகாரியும், மாவட்டச் செயலாளருமான சிந்தக அபேவிக்கிரம தலைமையில் நடைபெற்றது.

இந்தப் பயிற்சிப் பட்டறையானது, அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் கசுன் சிறீநாத் அத்தநாயக்கவின் ஒருங்கிணைப்பில் அம்பாறை மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். ஜெகராஜன் கலந்து கொண்டதுடன் 186 சான்றிதழ் பெற்ற அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அத்தோடு, பிரதேச செயலாளர்கள், பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள் மற்றும் மாவட்ட செயலக துறைசார் உத்தியோகத்தர்கள், இராணுவம், பொலிஸ், சிறைச்சாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், அனைத்து அரச நிறுவன அதிகாரிகள் மற்றும் தேர்தல் அலுவலக அதிகாரிகள் குழுவினரும் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை மையப்படுத்தியே இந்தப் பயிற்சிப் பட்டறை முன்னெடுக்கப் பட்டது.

(எ)

# திருகோணமலை - மட்டக்களப்பு தங்கங்களின் கிரிக்கெட் சமர்

திருகோணமலை, ஒக. 29

மட்டக்களப்பு - திருகோணமலை தங்கங்களின் 29ஆவது வருடாந்த கிரிக்கெட் சமர் திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

திருகோணமலை ஆர். கே. எம். சிறீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி கல்விச் சமூகம் 29ஆவது தடவையாக ஒழுங்கு செய்துள்ள திருகோணமலை ஆர். கே. எம். சிறீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கும், மட்டக்களப்பு, கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் சமர் நாளை மறுதினம் 31 ஆம் திகதி சனிக்கிழமை திருகோணமலை ஆர். கே. எம். சிறீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

திருகோணமலை இந்துக் கல்லூரி அதிபர் எஸ். கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த கிரிக்கெட் சமரில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் கே. சிவகுமார் பிரதம விருந்தினராகவும், திருகோணமலை உதவிக் கல்விப் பணிப்பாளர் என். பரமேஸ்வரன் கௌரவ விருந்தினராகவும், சிறுவர் கல்வி உதவிகள் அமைப்பின் சர்வதேச இணைப்பாளர் எஸ். கங்காதரன் மற்றும் கனடா சி. இ. டி. கிங் குறூப் பணிப்பாளர் பெஞ்சமின் லோரன் சுப்பிள்ளை ஆகியோர் விசேட விருந்தினர்களாகவும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இந்த கிரிக்கெட் சமர் தொடர்பில் கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரி அதிபர் எஸ். தயாபரன் மற்றும் சிறீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி அதிபர் எஸ். கணேசலிங்கம் ஆகியோருக்கு இடையில் நாளை 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

(எ)

# அம்பாறை கரையோரங்களில் டெங்கு நோய் பரவும் அபாயம்!

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை



கல்முனை, ஒக. 29

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் டெங்கு நோய் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதால் பொது மக்கள் மிகவும் முன் எச்சரிக்கையுடன் செயல்படுமாறு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகீலா இஸ்ஸதீன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயத்துக்குட்பட்ட சாய்ந்தமருது, கல்முனை, மருதமுனை, பாண்டிருப்பு, சம்மாந்துறை, காரைதீவு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, திருக்கோவில், பொத்துவில் மற்றும் இறக்காமம் ஆகிய பிரதேசங்களில் அதிகளவிலான நுளம்புப் பெருக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் அதனைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் திடீரென இடைவிட்ட மழை காலம் ஆரம்பித்துள்ளதாலும், கடும் வெயில் சுட்டெரிப்பதாலும் டெங்கு நுளம்பு பெருகுவதற்குச் சாதகமான சூழல் தோற்றுவிக்கபடக்கூடும் என்ற காரணத்தால் பிரதேச மக்கள் தங்களது வீடு மற்றும் சுற்றுப்புறச் சூழல், நீர் தேங்கி நிற்கும் பொருட்கள், நீர் தேங்கும் இடங்கள், வெற்று வளவுகள், கடற்கரையோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் தோணிகள், படகுகள் போன்ற இடங்கள் குறித்து அவதானத்துடன் செயல்படுமாறும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்பட் டுள்ளனர்.

இதேவேளை, மக்கள் வசிக்கும் குடியிருப்பு பிரதேசங்களில் உள்ள வடிகான்களில் நீண்ட காலத்துக்கு கழிவுநீர் தேங்கியுள்ளதாகவும் இது குறித்து கல்முனை மாநகர சபையின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளதாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதிகள் - படையினர் பாகிஸ்தானில் கடும் மோதல்!

## 35 பேர் உயிரிழப்பு

இஸ்லாமாபாத், ஓக. 29

**பாகிஸ்தானில் பயங்கரவாதிகள், பாதுகாப்புப் படையினர் இடையே நடந்த மோதலில் 35 பேர் உயிரிழந்தனர்.**

பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணத்தின் முசாகெல் மாவட்டத்தில் பயங்கரவாதத் தாக்குதல் நடைபெற்றது. முசாகெல் மாவட்டத்தில் ரரஷம் என்ற பகுதியில் சென்று கொண்டிருந்த பேருந்தில் பயணித்த பயணிகள் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். பேருந்தை இடைமறித்த பயங்கரவாதிகள் அதில் பயணம் செய்த பஞ்சாப் மாகாணத்தை சேர்ந்த புலம்பெயர் தொழிலாளர்களை குறிவைத்து தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 23 பேர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலுக்கு பலூசிஸ்தான் விடுதலை இராணுவம் என்ற கிளர்ச்சிக்குழு பொறுப்பேற்றது.

இந்தப் பயங்கரவாதத் தாக்குதலை தொடர்ந்து பலூசிஸ்தான் மாகாணத்தில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது, பாதுகாப்புப் படையினருக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை ஏற்பட்டது. இந்த துப்பாக்கிச் சண்டை மோதலில் பயங்கரவாதிகள் 21 பேர், பாதுகாப்புப் படையினர் 14 பேர் என 35 பேர் உயிரிழந்தனர்.

பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கை தொடர்ந்து நடைபெறும் என பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது. (எ)

# ஷேக் ஹசீனாமீது மேலும் நான்கு கொலை வழக்குகள்

## நாடு கடத்தப்படும் சூழல்

டாக்கா, ஓக. 29

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா மீது மேலும் நான்கு கொலை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.



பங்களாதேஷில் இடஒதுக்கீட்டுக்கு எதிராக மாணவர்கள் நடத்திய போராட்டம் வன்முறையாக வெடித்தது. இதனையடுத்து பிரதமர் பதவியை இராஜினாமா செய்துவிட்டு ஷேக் ஹசீனா இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளார்.

நாட்டை விட்டு வெளியேறிய ஷேக் ஹசீனாவுக்கு எதிராக பல்வேறு வழக்குகள் பங்களாதேஷில் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

பங்களாதேஷில் வெடித்த கலவரம் தொடர்பில் 42 கொலை வழக்குகள் உட்பட 51 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த நிலையில், ஷேக் ஹசீனா மீது மேலும் 4 கொலை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. முன்னதாக, ஷேக் ஹசீனாவின் தூதரக கடவுச்சீட்டும் இரத்து செய்யப்பட்டது. இதனால், ஷேக் ஹசீனா பங்களாதேஷுக்கு நாடு கடத்தப்படும் சூழல் உருவாகியுள்ளது. (எ)

# எரிசக்தி உபகரணங்களை உக்ரைனுக்கு வழங்குவோம்

## அமெரிக்க ஜனாதிபதி பைடன் அறிவிப்பு

வாஷிங்டன், ஓக. 29

உக்ரைன் நாட்டின் எரிசக்தி கட்டமைப்புகள் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளது சீண்டிப் பார்க்கும் செயல் என்றும் உக்ரைனுக்கு எரிசக்தி உபகரணங்களை வழங்குவோம் என்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, "உக்ரைன் நாட்டின் எரிசக்தி கட்டமைப்புகள் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளது சீண்டிப் பார்க்கும் செயல். நான் உக்ரைனுக்கு வான் பாதுகாப்பு தளவாடங்களை அனுப்பிவைப்பது குறித்து பரிசீலிக்கவுள்ளேன். மேலும், உக்ரைன் அதன் எரிசக்தி உட்கட்டமைப்புகளை சரிசெய்வதற்கும், தற்போது ஏற்பட்டுள்ள பின்னடைவை சீரமைக்கவும் உக்ரைனுக்கு எரிசக்தி உபகரணங்களை வழங்குவோம்" என்று கூறியுள்ளார். இதன் மூலம் இரண்டு ஆண்டுகளைக் கடந்து நடக்கும் போர் மீண்டும் உக்கிரமடையும் சூழல் உருவாகியுள்ளது. (எ)

# குடியரசு கட்சியினர் கமலாவுக்கு ஆதரவு

வாஷிங்டன், ஓக. 29

குடியரசு கட்சியின் முன்னாள் ஜனாதிபதியின் பணியாளர்கள் 200 பேர் கமலா ஹாரிஸுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் 2020ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலின்போதும், டொனால்ட் ட்ரம்புக்கு இந்தக் குழுவினர் எதிர்ப்பை வெளியிட்டனர்.

இந்தச் சூழலில், முன்னாள் ஜனாதிபதி ஜார்ஜ் டபிள்யூ புஷ்ஷிடம் இதற்கு முன்பு பணியாளர்களாக வேலை செய்த குடியரசு கட்சியை சேர்ந்த 200இற்கும் மேற்பட்டோர் கடிதம் ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதில், ஜனாதிபதித் தேர்தலில், துணை ஜனாதிபதியாக பதவி வகித்து வரும் கமலா ஹாரிஸுக்கு தங்களுடைய ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர். (எ)

# கமலா ஜனாதிபதியானால் அமெரிக்காவுக்கு பேரழிவு

## எலான் மஸ்க் எச்சரிக்கை


வாஷிங்டன், ஓக. 29

கமலா ஹாரிஸ் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் அமெரிக்காவுக்கு பேரழிவு ஏற்படும் என்று உலகின் முன்னணி பணக்காரரான எலான் மஸ்க் எச்சரித்துள்ளார்.



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் ஜனநாயக கட்சி வேட்பாளராக தற்போதைய துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸும், குடியரசு கட்சி வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும் களமிறங்கியுள்ளனர்.

இந்த நிலையில், எலான் மஸ்க் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், "ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவு செய்யப்பட்டால் ஜனநாயகத்தையும் அமெரிக்காவையும் காப்பாற்றுவார். கமலா ஹாரிஸ் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் அமெரிக்காவுக்கு பேரழிவு ஏற்படும். எனது வார்த்தைகளை குறித்து வைத்துக்கொள்ளுங்கள்" என்று குறிப்பிட்டுள்ளார். (எ)



# அணை உடைந்து அனர்த்தம் அறுபது பேர் உயிரிழப்பு!

கார்டூம், ஓக. 29

கிழக்கு சூடானில் உள்ள அர்பாத் அணை திடீரென உடைந்ததில் கடுமையான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இந்த விபத்தில் சிக்கி 60 பேர் பலியாகினர். மேலும் நூற்றுக்கணக்கானோர் மாயமானதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

அணை உடைந்ததால் மாநிலத்தின் தலைநகரான போர்ட் சூடானுக்கு அருகிலுள்ள கிராமங்கள் பேரழிவுக்கு உட்பட்டுள்ளன. வெள்ளத்தில் சிக்கியவர்களை வெளியேற்றுவதை முன்னுரிமையாக கொண்டு மீட்புக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. (எ)

# கமலாவுடன் நேரடி விவாதம் டொனால்ட் ட்ரம்ப் சம்மதம்

நியூயோர்க், ஓக. 29

ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் கமலா ஹாரிஸுடன் நேரடி விவாத நிகழ்வில் பங்கேற்க குடியரசு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் சம்மதம் தெரிவித்துள்ளார். முன்னதாக, விவாத விதிகளை சுட்டிக்காட்டி அதில் பங்கேற்பதை தவிர்க்கக் கூடும் என ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

இந்த விவாத நிகழ்வை ஏ. பி. சி. நியூஸ் நேரலையில் ஒளிபரப்பு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் 10ஆம் திகதி நடைபெறும் விவாத நிகழ்வில் கமலா ஹாரிஸ் மற்றும் டொனால்ட் ட்ரம்ப் பங்கேற்கவுள்ளனர்.





"கமலா ஹாரிஸுடன் நான் விவாத நிகழ்வில் பங்கேற்கிறேன். சி. என். என். ஊடக நிறுவனம் ஒருங்கிணைத்த விவாதத்தில் கடைப்பிடிக்கப்பட்ட அதே விதிமுறைகள் இதிலும் இருக்கும். முன்கூட்டியே எழுதி கொண்டு வரும் குறிப்புகள் போன்றவற்றுக்கு இதில் அனுமதி இல்லை. நியாயமான முறையில் இந்த விவாதம் நடைபெறும் என ஏ. பி. சி. எங்களிடம் உத்தரவாதம் அளித்துள்ளது" என ட்ரம்ப் தனது சமூக வலைத்தள பதிவில் குறிப்பிட்டுள்ளார். (எ)

# சுரங்க விபத்தில் சிக்கி 8 தொழிலாளர்கள் பலி

லுசாகா, ஓக. 29

ஆபிரிக்க கண்டத்திலுள்ள சாம்பியாவில் சுரங்கம் இடிந்து ஏற்பட்ட விபத்தில் சிக்கி 8 தொழிலாளர்கள் பரிதாபமாக பலியாகினர்.

சாம்பியா நாட்டின் லுசாகா மாகாணத்தில் சாங்வே மாவட்டத்தில் கட்டட பணிகளுக்குத் தேவையான கற்களை எடுக்கும் சுரங்கம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில், சுரங்கத்தில் வேலை செய்து வந்த தொழிலாளர்கள் பணியை முடித்தபோது, திடீரென சுரங்கம் இடிந்து விழுந்தது. இதனால், தொழிலாளர்கள் சுரங்க இடிபாடுகளில் சிக்கிக் கொண்டனர்.

மீட்புக் குழுவினர் 8 பேரின் உடல்களை மீட்டனர். ஏனையோரை தேடும் பணி நடந்து வருகிறது.

அந்தப் பகுதியில் சவாலான சூழல் காணப்பட்டது. இதனால், மீட்புப் பணியில் தொய்வு நிலை ஏற்பட்டது. இதனால் மீட்புப் பணியும் ஒத்தி வைக்கப் பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்கள் தங்களுக்கான சேவைகளை ஒரே இடத்தில் பெறும் வசதி தேவை

## வடக்கு மாகாண ஆளுநர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 29

**மக்கள் தங்களுக்கான சேவைகளை ஒரே இடத்தில் இலகுவில் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் நகரத் திட்டமிடல்கள் அமைய வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.**

தேசிய பௌதீக திட்டமிடல் தொடர்பான விசேட கலந்துரையாடல் வட மாகாண பிரதம செயலாளர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் கலந்துகொண்டு இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய பௌதீக திட்டமிடல் நடவடிக்கை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நகர திட்டமிடல்களின் போது புவியியல் கேந்திரங்களை மையப்படுத்தி, இலங்கையின் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு செல்வது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டு இந்த திட்டங்கள் முன்மொழியப்பட்டிருக்கின்றன.

வடக்கு மாகாணத்தை பொறுத்த வரை அனைத்து துறைகளையும் இணைப்பதற்கான தொடர்பு முறைமை ஒரு சவாலாக காணப்படுகின்றது. அதேபோல யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவது என்பது பாரிய சவாலாக காணப்படுகின்றது.

வீதி போக்குவரத்து என்பது நெடுந்தூரமாக காணப்படுவதன் காரணமாக முதலீட்டாளர்களின் வருகை மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது.

ஆகவே நகரத் திட்டமிடலின் போது போக்குவரத்து தொடர்பினை ஏற்படுத்தும் இலகு முறைகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் ஏனைய திட்டங்களை முன்னெடுப்பதற்கு அனுமதிகளை பெற்றுக் கொள்வது தொடர்பில் காணப்படக்கூடிய சிக்கல் நிலைகளை தவிர்த்து எவ்வாறு இலகுவில் முதலீடுகளை மேற்கொள்வது என்பது தொடர்பிலும் கவனம் செலுத்துவது அவசியமாக காணப்படுகின்றது.

நகர திட்டமிடல்களின் போது பெருநகரங்களை அபிவிருத்தி செய்யும் அதே சந்தர்ப்பத்தில் ஏனைய சிறு நகரங்களையும் அபிவிருத்தி செய்து அவற்றையும் பெரு நகரங்களுடன் இணைக்க வேண்டும்.

அத்துடன் கழிவு முகாமைத்துவம், பயணிகளுக்கான சிறந்த தங்குமிட வசதிகள் உள்ளிட்ட அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கருத்தில் கொண்டு நகரத் திட்டமிடல்களை வடிவமைத்தல் அவசியம்.

வடக்கையும் கிழக்கையும் இணைக்கக்கூடிய வட்டுவாகல் பாலத்தை புனரமைப்பு செய்வது தொடர்பிலும் இந்த செயல் திட்டத்தில் கவனம் செலுத்துவது சிறப்பாக அமையும்- என்றார்.

இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண பிரதம செயலாளர், தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள், வடக்கு மாகாணத்தில் உள்ள மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(அ)

# சுவிஸ் குடும்பஸ்தர் கொலை; இருவர் பொலிஸாரால் கைது

வவுனியா, ஓக. 29

வவுனியா கனகராயன்குளம் சின்னடம்பன் பிரதேசத்தில் நேற்று முன்தினம் சுவிஸில் இருந்து வருகை தந்த குடும்பஸ்தர் ஒருவர் கொலை செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் இருவர் சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோவில் திருவிழா ஒன்றில் பங்கேற்ற பின்னர் வீடொன்றில் சுவிசில் இருந்து வந்தவரும் அவரது உறவினரும் தங்கி இருந்துள்ளனர்.

இந்நிலையில் இருவரும் இரவு மது போதையில் வீட்டில் தூங்கியபோது வீட்டுக்குள் நுழைந்தவர்களினால் ஒருவர் வீட்டுக்குள் இருந்து இழுத்து வரப்பட்டு வெளியே விடப்பட்டதன் பின்னர் மற்றவர் கொலை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்டதாக சந்தேகத்தின் அடிப்படையில் கொலை செய்யப்பட்டவருடன் வீட்டில் தங்கியிருந்தவரும் சுவிஸில் இருந்து அண்மையில் நாட்டுக்கு வருகை தந்து வவுனியா உக்கிளாங்குளத்தில் வசித்து வந்த நபர் ஒருவரும் கனகராயன்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வீட்டில் இருந்த சி.சி.ரி.வி கமெரா, இரசாயன பகுப்பாய்வுக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# ஜனாதிபதியாக எவர் வந்தாலும் எங்களுக்கு எந்த பலனும் இல்லை!

## காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் தெரிவிப்பு

மன்னார், ஓக. 29

யார் ஆட்சிக்கு வந்தாலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு உரிய தீர்வு கிடைக்கும் என நம்பவில்லை என வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியாக எவர் வந்தாலும் எமக்கு எந்த பலனும் இல்லை எனவும் தாம் யாருக்கும் ஆதரவும் இல்லை எனவும் மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.

மன்னாரில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

(அ)

# நாணய நிதிய 2ஆம் கட்ட நிதி உடன்படிக்கைக்கு அங்கீகாரம்

கொழும்பு, ஒக். 29

அபிவிருத்திக் கொள்கை நிதியிடல் வேலைத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கான நிதி உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு அமைச்சரவையில் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அமைச்சர் பந்துல குணவர்தன இதனை தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவான நிதிவசதிக்கு இணையாக அபிவிருத்திக் கொள்கை நிதியிடல் வேலைத்திட்டத்தின் மூலம் உலக வங்கி இலங்கையில் நீடித்த மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலுக்காக ஒத்துழைப்பு வழங்குகின்றது.

இவ்வேலைத்திட்டம் இரண்டு ஆண்டு வேலைத்திட்டமாக அமைவதுடன், அதன் முதலாம் கட்டம் 2023 ஆம் ஆண்டில் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

அபிவிருத்திக் கொள்கை நிதியிடல் வேலைத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் அரசின் மறுசீரமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக விசேட எடுத்தல் உரிமையாக 150.6 மில்லியன் நிதியை வழங்குவதற்கு உலக வங்கி உடன்பாடு தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க, குறித்த நிதிவசதியைப் பெற்றுக் கொள்வதற்குரிய உலக வங்கிக் குழுமத்தின் சர்வதேச அபிவிருத்திக்கான இணை நிறுவனத்துடன் குறித்த ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(அ)

# செயற்கை நுண்ணறிவு தொடர்பான மூலோபாயத் திட்டத்துக்கு அங்கீகாரம்

கொழும்பு, ஓக. 29

செயற்கை நுண்ணறிவு தொடர்பாக இலங்கையின் தேசிய மூலோபாயத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பு நேற்று முன் தினம் அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட அமைச்சர் பந்துல குணவர்தன இதனை தெரிவித்தார்.

இலங்கை தற்போது தனது டிஜிற்றல் நிலைமாற்றத்திற்கான பயணத்தில் குறிப்பிடத்தக்களவு பெறுபேறுகளை அடைந்திருப்பினும், உலகளாவிய செயற்கை நுண்ணறிவு தொடர்பாகக் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு இயலுமை கிட்டவில்லை. விவசாயம், சுகாதார சேவைகள் மற்றும் கல்வி போன்ற முக்கிய துறைகளில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதால் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும், அரச சேவைகளை மேம்படுத்துவதற்கும் இயலுமை காணப்படுகின்றது.

அதன்மூலம், பேண்தகு பொருளாதார விருத்தியை அடைவதற்கும் மற்றும் வறுமையை ஒழிப்பதற்பதற்காக முக்கிய ஒத்துழைப்பு வழங்கப்படுவதுடன், செயற்கை நுண்ணறிவின் பயன்களை சமூகத்தில் நியாயமாகப் பகிர்ந்தளிப்பதற்கும் வாய்ப்புக்கள் கிடைக்கும்.

செயற்கை நுண்ணறிவு அபிவிருத்தி மற்றும் பயன்பாட்டின் மூலம் டிஜிற்றலால் வலுவூட்டப்பட்ட இலங்கையை உருவாக்குவதற்காக செயற்கை நுண்ணறிவு தொடர்பாக இலங்கையின் தேசிய மூலோபாயத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2030 ஆம் ஆண்டாகும்போது இலங்கையை செயற்கை நுண்ணறிவு தொடர்பில் பிராந்தியத்தின் மத்தியநிலையமாக மையப்படுத்துவதற்கும், மற்றும் உலகளாவிய போட்டித்தன்மை மற்றும் பொருளாதாரத்தின் தாங்குதிறனை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

குறித்த நோக்கங்களை அடைவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள செயற்கை நுண்ணறிவு தொடர்பாக இலங்கையின் தேசிய மூலோபாயத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தொழிநுட்ப அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(அ)

# 'நிலத்தடி நீர் எங்கள் உயிர்நாடி' நல்லூரில் கண்காட்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 29

நிலத்தடி நீர் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் கண்காட்சி, யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் உள்ள யாழ் மாநகர சபை தீயணைப்பு படை வளாகத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

யாழ் பல்கலைக்கழகத்தின் வடமாகாண நீர் பாதுகாப்பு செயற்றிட்டமும், இளைய நீர்த் துறையாளர் வட்டம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் வடமாகாண நீர்ப்பாசன திணைக்களம், நீர்வளச் சபை உள்ளிட்ட பல்வேறு நீர் சார்ந்த அரச திணைக்களங்களும், அமைப்புகளும் இணைந்து குறித்த நிகழ்வை முன்னெடுத்துள்ளன.

"நிலத்தடி நீர் எங்கள் உயிர்நாடி" எனும் தொனிப்பொருளில் கண்காட்சி கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது.

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு மக்களுக்கு நீர் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான இக்கண்காட்சியில் வடக்கு பிரதம செயலாளர் எஸ்.இளங்கோவன், நீர் பாதுகாப்பு செயற்றிட்ட ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் எஸ்.சிறீஸ்கந்தராஜா மற்றும் நீர்ப்பாசன பொறியியலாளர்கள், பொதுமக்கள், நீர் ஆர்வலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள குறித்த கண்காட்சியில் நீர் சார்ந்த ஆய்வு விபரங்கள், விஞ்ஞான விளக்கங்கள், கலந்துரையாடல்கள், விளையாட்டுகள், இளையோர்கள் - சிறார்களுக்கான பரிசுப் போட்டிகள் என பலவகையான நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன.

வரைமுறையின்றி அதிகமாக குழாய் கிணறுகளை அமைப்பதன் மூலம் நன்னீர் உவர் நீராக மாற்றப்படும் அபாயம் தொடர்பிலும், வடக்கிற்கான ஆறு தொடர்பிலான விளக்கங்களும், நீரில் என்னென்ன பரிசோதனைகளை மேற்கொள்வதன் மூலமாக நீரில் உள்ள பிரச்னைகள் தொடர்பில் அறிந்து கொள்ளலாம் போன்ற விடயங்களை அறிந்துகொள்ள இக்கண்காட்சி உறுதுணையாக உள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுவேட்பாளரை...

தெரிவித்தார்.

மேலும், தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் தமிழர் விடுதலை கூட்டணியின் நிலைப்பாடு தொடர்பில் விரைவில் கட்சியின் செயல்குழு கூடி ஆராய்ந்து முடிவெடுத்து அறிவிக்கும். எனினும், தனிப்பட்ட முறையில் தமிழ்ப் பொது வேட்பாளர் போட்டியிடுவதை வரவேற்கிறேன் - முழுமையாக ஆதரிக்கிறேன்.

இதேநேரம், இனப் பிரச்னைக்கு தீர்வாக எமது கட்சி தன்னாட்சியை வலியுறுத்துகின்றது. இந்த விடயத்தில் நாம் உறுதியாக இருக்கிறோம் - என்றும் கூறினார்.

அருண் தம்பிமுத்து பங்கேற்ற இந்த நேர்காணல் நிகழ்ச்சி நாளை மறுதினம் சனிக்கிழமை இரவு 10 மணிக்கு ஒளிபரப்பாகும். (ஐ)

## தேர்தல்...

கடந்த 76 வருடங்களாக இலங்கை யின் தோல்விக்குக் காரணமான ஒற்றையாட்சி முறையை ஒழித்து சமஷ்டி அரசியல் யாப்பை கொண்டு வருவதன் மூலம் மாத்திரமே அனைத்து இனங்க ளையும் அரவணைத்து இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியும் என்ற உண்மையை தங்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளியிடுவதன் மூலம் நாட்டின் இனப்பிரச்னை தீர்ப்பதற்கு நீங்கள் மேற்கூறிய விடயங் களின் அடிப்படையில் தீர்வை காண விளைகின்றீர்கள் என்பதை இந்த நாட்டு மக்களுக்கு நீங்கள் வெளிப்படுத்த வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

"அவ்வாறு தேர்தல் விஞ்ஞாபனத்தில் மேற்படி விடயங்களை தெளிவாகவும் - முழுமையாகவும் உள்ளடக்கினால் ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிப்பது என்ற எமது நிலைப்பாட்டை பரிசீலனை செய்வது தொடர்பில் நாம் ஆராய முடியும்" - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## தமிழ் அரசின்

சிலர் பிரிந்து கட்சி ஒன்றை உருவாக்கவுள்ளனர் என்று கூறப்படுவது தொடர்பாக அவரிடம் கேள்வி எழுப்பினார். இந்தக் கேள்விக்கு பதிலளித்த போதே விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

மேலும், பலமான கட்சியாக இருந்த இலங்கை தமிழ் அரசு கட்சியின் இன்றைய பரிதாப நிலைக்கு ஒருவரே காரணம். கட்சியை பிரிக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியவர் அவரே. நான்கூட அந்தக் கட்சியிலிருந்தே வெளியேறினேன். நான் வெளியேறுவதற்கும் அவரே காரணம். அந்தக் கட்சியிலிருந்து மேலும் பலர் வெளியேறினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை - என்றார்.

இதேநேரம், தமிழ்ப் பொது வேட்பாளருக்கான ஆதரவு நிலைப்பாட்டிலிருந்து எமது கட்சி வெளியேறவில்லை. தொடர்ந்தும் எமது கட்சி ஆதரவு வழங்குகிறது. நான் மருத்துவ கண்காணிப்பில் இருக்க வேண்டிய தேவை ஏற்பட்டதால் அண்மைக்காலமாக பிரசாரத்திலோ அதுசார் விடயங்களிலோ நேரில் பங்கேற்க முடியவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுக் கட்டமைப்பினரை பேச்சுக்கு அழைத்தது குறித்து பேசிய அவர்,

எனக்கும் ஜனாதிபதியின் அழைப்பு கிடைத்தது. ஆனால், பொதுக் கட்டமைப்பினருக்கும் சேர்த்து அழைப்பு விடுக்கப்பட்டதாகக் கூறப்பட்ட நிலையில் பொதுக்கட்டமைப்பினருடன் இணைந்தே முடிவு செய்ய வேண்டும். இதனால், தனிப்பட்ட முறையில் இந்த சந்திப்பில் பங்கேற்க முடியாது என்று ஜனாதிபதி அலுவலகத்துக்கு தெரிவித்துள்ளேன். தனிப்பட்ட முறையில் ஜனாதிபதியுடன் பேசுவது பிழை - என்றும் கூறினார். (ஐ)

## பொது வேட்பாளருக்கே...

தொடர்பில் அந்தக் கழகம் விடுத் துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது. அந்த அறிக்கையின் முக்கிய அம்சங்கள் மட்டும் வருமாறு,

நாம் இந்த நாட்டின் பூர்வீக குடிகள். வடக்கு, கிழக்கு தமிழர்களுடைய தாயகம், நாம் தனித்துவமானவர்கள் - எமக்கு சுயநிர்ணய உரிமையுண்டு. எமது நிலம், மொழி, கலை, கலாசாரம். பண்பாடு போன்றன பாதுகாக்கப்பட வேண்டும்.

அதற்கு பூரண சுயாட்சி அதிகாரம் எமது பகுதிக்கு தேவை என்பதை முன்னிறுத்தி தமிழ் மக்கள் தங்கள் கோரிக்கைக்கான சர்வஜன வாக்கெடுப்பாக இந்தத் தேர்தலை எதிர்கொண்டு அதற்கான அங்கீகாரத்தை பெறவேண்டும்.

இதன் மூலம் இலங்கை அரசுக்கும் சர்வதேசத்துக்கும் நாம் இன்னும் எமது உரிமைப் போராட்டத்தில் உறுதியாக இருக்கின்றோம் என்பதை அடையாளப்படுத்த முடியும். இந்த ஜனாதிபதித் தேர்தலை தமிழ்மக்களின் விடிவுக்காக ஜனநாயக முறையில் புதிய அணுகுமுறையாக அணுகி எமது உரிமைகளை வென்றெடுக்க புத்திசாதுரியமாக நடந்து இதனை அணுகுவதே சிறந்த தீர்மானமாக அமையும்.

இந்த முயற்சிக்கு வடக்கு, கிழக்கில் செயற்படும் தமிழ்தேசியம் சார்ந்த அனைத்துக்கட்சிகளும் வடக்கு - கிழக்கில் செயல்படும் அத்தனை பொது அமைப்புகளும் வடக்கு - கிழக்கை சேர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் அத்தனை தமிழ் பேசும் மக்களும் தமிழ் பொது வேட்பாளருக்கு தங்கள் பேராதரவை வழங்கி வாக்குகளை செலுத்த வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

## தேர்தல் விதி...

5 சாரதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வெற்றிடங்கள் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்னரும் பின்னரும் இருந்த நிலையில் மருத்துவமனையின் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபையை ஆட்சேர்ப்பு செய்வது சட்டத்துக்கு முரணானது என சிறீ ஜெயவர்தனபுர மருத்துவமனை கிளையின் செயலாளர் சந்தன ஜயலத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மருத்துவமனையின் தலைவராக மருத்துவர் சாரங்க அழகப்பெரும நியமிக்கப்பட்ட பின்னர் இடம்பெற்ற முறைகேடுகள் குறித்து (இன்று) வியாழக்கிழமை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய தொழிற்சங்கங்கள் முடிவு செய்துள்ளன என்றும் அவர் கூறினார்.

மேலும் ஜெயவர்த்தனபுர மருத்துவமனைக்கு மருத்துவர்களை நியமிக்கும் முறைமையில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் குறித்து அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் மருத்துவமனை கிளையிடம் அறிக்கை கோரியுள்ளது.

இந்த மருத்துவமனையானது முழுமையாக சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் மருத்துவமனை அல்ல என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் மருத்துவர் சமில் விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இது ஒரு பகுதியளவான அரச மருத்துவமனை என்பதால், நேரடியாக மருத்துவர்களை நியமிக்க சுகாதார அமைச்சகம் சில வரம்புகளை விதித்துள்ளது. மருத்துவமனைக்கு சிறப்பு மருத்துவர்களை நியமிக்க தனி முறை உள்ளது.

இவை அனைத்தையும் ஆய்வு செய்ய வேண்டும். மேலும் மருத்துவமனையின் சிறுநீரக பிரிவில் உள்ள மருத்துவர் ஒருவரின் பணியால் மற்ற மருத்துவர்களுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது - என்றும் கூறினார்.

## ரெலோ...

அடித்தளத்தையே உடைத்து வடக்கு - கிழக்கை பிரித்தவர்கள். அவர்களுக்கும் தமிழர்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்றும் அவர் கூறினார்.

நேற்று தமிழ் பொது வேட்பாளரை ஆதரித்து பிரசாரத்தில் ஈடுபட்டபோதே செல்வம் அடைக்கலநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தமிழ்ப் பொது வேட்பாளருக்குரிய ஆதரவுதளம் அதிகரித்து வருகின்றது. எமது மக்கள் எமது இலட்சியப் பாதையில் பொது வேட்பாளருக்கு கட்டாயம் வாக்களிப்பார்கள்.

எமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் பொது வேட்பாளர் விடயம் தொடர்பாக எதிராகக் கூறும் கருத்துகள் அவருடைய தனிப்பட்டவை. எங்களுடைய கட்சி ஒரு ஜனநாயக ரீதியான கட்சி.

தமிழ் மக்களும் தேசியத்தை நேசிக்கின்ற கட்சிகளும் ஓர் அணியில் திரள வேண்டும். பிரித்தாளும் தந்திரத்தை கையாண்டிருக்கின்ற நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் எமது தமிழ் சமூகம் ஒரு குடையின் கீழ் அணி திரண்டு இருக்கின்றது. இதனை செய்தியாக்க வேண்டும் என்பதுதான் நமது "சங்கு" சின்னத்தின் நோக்கமாக இருக்கின்றது.

தமிழீழ விடுதலை இயக்கத்தினர் மக்களுடைய சிந்தனை அடிப்படையில் எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என எண்ணுபவர்கள். எந்த நிலையிலும் தென்னிலங்கை வேட்பாளர்களுக்கு விரல் நீட்டுகின்ற [illegible] - என்றார். (ஐ)

## போலி...

- என்றார்.

மேலும், ஐரோப்பிய ஒன்றியத்தால் மேற்கொள் ளப்பட்டதாகக் கூறப் படும் மற்றும் சமூக ஊடகங்களில் பரவிவரும் கருத்துக்கணிப்புகள் தேர்தல் செயல் முறையை ஒழுங்குபடுத் தும் விதி முறைகளுக்கு எதிரானவை.

இது ஒரு சந்தைப்படுத்தல் முயற்சியாகும். அவர்கள் இந்த பொது கருத்துக் கணிப்புகளுக்கான மனிதர்களை எவ்வாறு தேர்வு செய்கிறார்கள் என்பதற்கான விவரங்களை வெளியிடுவதில்லை. இந்த போலி கருத்துக்கணிப்புகளின் நோக்கம் அவர்களின் வாக்காளர் அடிப்படையை அதிகரிப்பதாகும். ஒருவர் மேலே வரும்போது மற்றொ ருவர் கீழே செல்லும்போது அவர்களுக்கு வாக்கு கள் அதிகரிக்கும்.

தவறான தகவல்களை பயன்படுத்தி வாக்காளர்களை தவறாக வழிநடத்துவது - முக்கியமான சமூக - அரசியல் விவகாரங்களில் நம்பிக்கையின்மையை வளர்த்து உண்மையை மறைக்கும் அபாயத்தை உருவாக்குகிறது. - என்றும் கூறினார். (ஐ)

## தமிழ் அரசு...

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு (இலங்கை தமிழ் அரசுக் கட்சி) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளதாக பெரியளவிலான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிதியானது குறிப்பிடப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்டது போன்ற தோற்றப்பாடு வேண்டுமென்றே ஏற்படுத்தப்படுகின்றது. பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிதி, மற்றும் பல்வேறு அபிவிருத்தி நிதிகள் ஜனாதிபதி செயலாகத்தால் இந்த வருடம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது.

இதற்கு உதவியாக அந்தந்த மாவட்டத்தை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களால் அபிவிருத்திக்காக முன் மொழிவுகள் கோரப்பட்டிருந்தன. இந்தக் கோரிக்கைகளின் அடிப்படையில் வெவ்வேறு தொகைகள் ஜனாதிபதி செயலகத்தால் ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது.

இந்தப் பணம் மேற்சொன்ன அபிவிருத்தி பணிகளுக்காக நேரடியாக மாவட்ட செயலகங்களுக்கு அனுப்பப்படுகின்றதே தவிர, எந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நேரடியாகக் கொடுக்கப்படவில்லை என மேலும் குறிப்பி டப்பட்டுள்ளது. (ஐ)

## தமிழ் பொது...

மாவட்ட மூத்த உறுப்பினரும் காலஞ்சென்ற கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் செயலாளருமான சூ. ஜேசுதாசன் ஆகியோர் நாடா வெட்டி தேர்தல் பணிமனையை திறந்து வைத்தனர்.

எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கான பிரசாரங்கள் திருகோணமலையில் உத்தியோகபூர்வமாக நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐ.நா...

ஆணையாளரின் பணிமனைக்கு சமர்ப்பிப்பதற்கான அறிக்கையின் மாதிரி வடிவம் அனைத்து கட்சி தலைவர்களுக்கும் பல நாட்களுக்கு முன்னரே எம்மால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் ஆணையாளரின் அலுவலர்களுடன் நடைபெற்ற சந்திப்பில் ரெலோவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், கட்சியின் பேச்சாளர் கு. சுரேந்திரன், பிரான்ஸிலிருந்து ஏற்பாட்டாளர் மகேந்திரன் குலராஜ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இன்னோரன்ன காரணங்களால் மற்ற கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளமுடியவில்லை.

இருப்பினும், சந்திப்பில் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் உட்பட கலந்து கொண்டவர்கள் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் விடயங்களின் தற்போதைய நிலை, தொடர்ந்தும் மீறப்பட்டு வரும் மனித உரிமைகள் விடயங்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தனர். மனித உரிமைகள் பேரவைக்கு சமர்பிக்கத் தயாராகியிருந்த ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையும் அதில் கலந்துரையாடப்பட்டிருந்தது. எதிர்வரும் மனித உரிமைகள் பேரவையின் அமர்வுக்கு முதலாக எமது தரப்பு அறிக்கை சமர்ப்பிக்கப்படுவது மிகவும் அவசியமாகும்.

நல்லிணக்கம், பொறப்புக்கூறல் சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்தின் மெத்தனப்போக்கும் அதனால், தமிழ் மக்கள் தொடர்ந்தும் எதிர்கொண்டு வரும் பிரச்னைகளையும் சர்வதேசத்துக்கு சொல்வதற்கு நாங்கள் பல்வேறு முயற்சிகளை எடுத்துள்ளோம். அதில் பொதுவேட்பாளரும் ஒரு பொறிமுறையாகக் கையாளப்படுகிறது.

இந்த நேரத்தில் மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத் தொடர் எமது பிரச்னைகளை எடுத்துச் சொல்வதற்கான மிகப் பிரதான தளமாக அமைந்திருக்கிறது. சர்வதேச நாடுகள் பொறுப்புக் கூறல், நல்லிணக்கம் சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கின்ற மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரை ஜனாதிபதி தேர்தல் விடயங்களால் நாம் மறந்து விடல் ஆகாது.

யுத்தக் குற்றங்கள், மனித உரிமைகள் மீறல், மனிதத்துக்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றோடு எமது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதியைப் பெற்றுக்கொள்ள ஐ. நா. பொறிமுறை மற்றும் மனித உரிமைகள் பேரவையின் நடவடிக்கைகளில் மனம் தளராது தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டு காத்திருக்கும் எமது மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற எமது காத்திரமான தொடர் நடவடிக்கைகள் அவசியமாகும்.

மிகக் கடினமான தேர்தல் விடயங்களை கையாளும்போதிலும் எமது இன நலன் சார்ந்த பிரதானமான ஐ. நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத் தொடரில் எமது மக்கள் சார்பாக அறிக் கைகள் இடம் பெறுவது தேர்தல் நலன்களையும் தாண்டி முக்கியமான தாகும்.

ஆகவே அனைத்துத் தமிழ்த் தேசியப் பரப்பிலும் பணியாற்றிக் கொண்டிருக்கும் அரசியல் கட்சிகள் பொது அமைப்புகள் ஆகியோரை இந்த பேரவை கூட்டத் தொடருக்கான அறிக்கை சமர்ப்பிக்கும் எமது முயற்சியில் கைகோக்க வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

## தென்னிலங்கை தரப்புகளோடு பேச்சுவார்த்தை தேவையற்றது

### கூறுகிறது தமிழர் விடுதலைக் கூட்டணி

யாழ்ப்பாணம், ஒக. 29

தமிழ்ப் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட்டுள்ள சூழலில், தென்னிலங்கை தரப்புக்களோடு, பேச்சுவார்த்தைகளுக்குச் செல்லத் தேவையில்லை என தமிழர் விடுதலைக் கூட்டணி அறிவித்துள்ளது.

தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்தி, தேர்தலை எதிர்கொள்ளும் சந்தர்ப்பத்தில், தென்னிலங்கை வேட்பாளர்களோடு, பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பது அர்த்தமற்றது என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் த.அருண்மொழிவர்மன் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச கூட்டுறவு தின விழா யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

யாழ்ப்பாணம், ஒக. 29

யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சமூகத்தின் ஏற்பாட்டில் 102 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா நிகழ்வு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலை வர் க. மகாதேவன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

நிகழ்வில் இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் பணிப்பாளர் ஜி.டீ சரத்வீரசிறி பிரதம விருந்தினராக் கலந்து கொண்டார்.

வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான ந.திருலிங்கநாதன் சிறப்பு விருந்தினராகவும், யாழ். கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து கூட்டுறவுக் கீதம், வரவேற்புரையுடன் நிகழ்வு இதன்போது கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையை இடம்பெற்ற போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (அ)

## கைவிலங்குகளுக்கு தட்டுப்பாடு!

கொழும்பு, ஒக. 29

நாடு முழுவதும் உள்ள பொலிஸ் நிலையங்களில் கைவிலங்குகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் தற்போதுள்ள சில கைவிலங்குகள் செயலற்ற நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் குறித்த கைவிலங்குகளைப் பயன்படுத்துவது ஆபத்தானது எனவும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தப்பிச் செல்ல வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகின்றது. இதன் காரணமாகக் கடமையில் இருக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பிரிவிடம் வினவியபோது-

அவ்வாறான தகவல் எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை எனவும் இது தொடர்பில் பொலிஸ் நிர்வாகப் பிரிவினரிடம் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் கூறப்பட்டது. (அ)

## ரணில் தேர்தலில் போட்டியிட தடை கோரும் மனு நிராகரிப்பு

கொழும்பு, ஒக. 29


பதில் பொலிஸ் மா அதிபரை நியமிக்கத் தவறியமை மற்றும் உச்ச நீதிமன்றத்துக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கும் நீதியரசர்களை நியமிக்காமை என்பவற்றின் அடிப்படையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தகுதியற்றவர் என அறிவிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாது உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

நீதிமன்றக் கட்டணமாக 50,000 ரூபாய் செலுத்துமாறும் மனுதாரருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மனுதாரர்கள் நீதிமன்றத்துக்கு பொய்யாகத் தகவல்களை சமர்ப்பித்துள்ளதாகவும், அந்த மனு அரசியலமைப்பின் 92ஆவது சரத்தை மீறுவதாகவும் இருப்பதாக சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே இதன்போது ஆட்சேபனை தெரிவித்தார். (அ)

# நிரந்தர வீஸா கிடைக்காத விரக்தியால் இலங்கை அகதி ஆஸியில் உயிர்மாய்ப்பு!

### உள்துறை அமைச்சின் முன் போராட்டத்திலும் ஈடுபட்டவர்



மெல்பர்ன், ஒக. 29

**அவுஸ்திரேலியாவில் நிரந்தர விஸாவை வழங்கக்கோரி போராட்டத்தில் ஈடுபட்டு வந்த அகதி கோரிக்கையாளரான மனோ என்பவர் தீமுட்டி தற்கொலை செய்துள்ளார்.**

இச்சம்பவம் அவுஸ்திரேலியாவில் நிரந்தர டன்டிநொங் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் தனது காருக்குள்ளிருந்தவாறு தீ மூட்டியுள்ளார். எரிகாயமடைந்த நிலை யில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் அவர் நேற்று முற்பகல் உயிரிழந்தார் என தெரிவிக்கப்படுகிறது.

அவுஸ்திரேலியா உள்துறை அமைச்சரின் அலுவலகத்துக்கு முன்னால் கடந்த நாற்பது நாட்களுக்கு மேலாக இடம்பெற்று வரும் போராட்டத்தில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்தவரே மனோ என போராட்டக்காரர்களும் தெரிவித்தனர்.

தமிழ் புகலிடக் கோரிக்கையாளர் உயிரிழந்துள்ள சம்பவம், அவுஸ்திரேலிய அரசின் அகதிகள் தொடர்பான கொள்கைகளின் பேரழிவான தாக்கத்தை வெளிப் படுத்தியுள்ளது என்று தமிழ் அகதிகள் அமைப்பின் பேச்சாளர் தெரிவித்தார்.

“மனோவுக்கு 23 வயதுதான் ஆகின்றது. அவுஸ்திரேலிய அரசின் கொடூரமான மற்றும் மனிதாபிமானமற்ற கொள்கைகளால் ஏற்படுத்தப்பட்ட உளவியல் வேதனை, வாழ்வதற்கு எதுவும் இல்லை என்று நம்பும் நிலைக்கு அவரை தள்ளியுள்ளது.” - என்று வைத்தியசாலையில் மனோவுடன் இருந்த ரதி என்பவர் கூறினார்.

“நிரந்தர விஸாக்களுக்காகக் காத்திருக்கும் எண்ணற்ற அகதிகள் தங்கள் உயிரை இழப்பதை நாங்கள் பார்த்திருக்கிறோம். இந்த பட்டியலில் மற்றுமொரு இளைஞனும் இணைந்துள்ளமை கவலையளிக்கின்றது.” - என்று தமிழ் அகதிகள் அமைப்பின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த மனோ, 2012ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்து படகு மூலம் அவுஸ்திரேலியாவை வந்தடைந்துள்ளார். பல மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த அவர், இறுதியில் சமூகத்தில் விடுவிக்கப்பட்டார்.

அவர் தனக்கு தானே தீ மூட்டி நேற்று முன் தினம் தற்கொலை செய்துகொண்டுள்ளார் அவரது உடலில் 80 சதவிகிதம் தீக்காயம் ஏற்பட்டது. இந்நிலையில் சிகிச்சை பலனின்றி மெல்போர்னில் உள்ள அல்பிரட் வைத்தியசாலையில் உயிரிழந்தார். (அ)

## ‘சொபாதனவி’ சுழற்சி மின் நிலையத்தின் சுழற்சி கட்டத்தை திறந்து வைத்தார் ரணில்

கொழும்பு, ஒக. 29


கெரவலப்பிட்டி ‘சொபாதனவி’ ஒருங்கிணைந்த சுழற்சி மின் நிலையத்தின் சுழற்சி கட்டத்தை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை திறந்து வைத்தார்.

இலங்கையின் எரிசக்தி துறையில் ஒரு தனித்துவமான மைல் கல்லைக் குறிக்கும் இந்த மின் நிலையமானது முதன்மை எரிபொருளாக இயற்கை திரவ எரிவாயுவைக் கொண்டு இயங்கும் இலங்கையின் முதலாவது அனல் நிலையமாகும்.

இந்த மின் நிலையம், 350 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய திறனைக் கொண்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

## சர்வதேச நாணய நிதியத்துடன் நாம் எந்தக் கலந்துரையாடலுக்கும் தயார்!

### ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு



கொழும்பு, ஒக. 29

சர்வதேச நாணய நிதியத்துடன் எந்தவொரு கலந்துரையாடலுக்கும் எந்த நேரத்திலும் தாங்கள் தயாராக உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

அதன் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார அறிக்கையொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவிக்கையில் -

சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகள் மற்றும் நிபந்தனைகள் எனக் கூறி நாட்டு மக்களுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் ஜனாதிபதி முன்னெடுக்கும் செயற்பாடுகள் சர்வதேச நாணய நிதியத்தின் உண்மையான யோசனையல்ல.

சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கம் காணப்பட்ட உடன்படிக்கை மற்றும் அது தொடர்பான ஏனைய விடயங்கள் தொடர்பில் மெய் நிகர் மூலம் கலந்துரையாடுவதற்குத் தாம் தயாராக உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி மாநாட்டில் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

அதில் ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட கட்சிகள் இணைந்து கருத்து தெரிவிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

எவ்வாறாயினும் நாட்டின் பொருளாதார நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, சர்வதேச நாணய நிதியத்திடம் ஆலோசனை பெற்று அதன் ஆதரவைப் பெறவேண்டும் என, நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ளதாக அறிவிப்பதற்கு முன்னரே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறியிருந்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்யும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் கட்சியின் பொருளாதாரக் கொள்கைக் குழுவைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

அந்த சந்தர்ப்பத்தில், சாதாரண மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் நிபந்தனைகள் எதுவும் இருப்பின் அவை திருத்தப்பட வேண்டும் என்ற யோசனையை ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்திருந்தது - என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

## சர்வதேச தேர்தல் கண்காணிப்பு குழுக்கள் இலங்கைக்கு வருகை

கொழும்பு, ஒக. 29

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்களுடனான முதலாவது குழு இலங்கை வந்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் வாரங்களில், ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பாளர்களுடனான மற்றொரு குழுவும் இலங்கை வர உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், பொதுநலவாய தேர்தல் கண்காணிப்பாளர் குழுவொன்றும் ஜனாதிபதித் தேர்தலை கண்காணிக்கும் பணிகளில் பங்கேற்பதற்காக இலங்கை வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்காக இந்த குழுக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.08.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.